
# பஞ்சாட்சரம்
# பா நாடகங்கள்



# பஞ்சாட்சரம்
# பா நாடகங்கள்

பண்டிதர்

## ச.வே.பஞ்சாட்சரம்

வெளியீடு:
பொன்னெழுத்துப் பதிப்பகம்,
இணுவில் மேற்கு,
சுன்னாகம்,
இலங்கை.

நூல் : பஞ்சாட்சரம் பாநாடகங்கள்
PANCHARDCHARAM - PAA NAADAHANGAL

ஆசிரியர் : பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்
Author PANDIT.S.V.PANCHARDCHARAM

முதற்பதிப்பு : ஐப்பசி 2005
First Edition October 2005

வெளியீடு : பொன்னெழுத்துப் பதிப்பகம், இணுவில்.
Publishers PONNELUTHTHU PATHIPPAHAM, INUVIL.

பதிப்புரிமை : ப.வேழத்தெழிலன் – கனடா.
Royality P.Verlaththelilan - Canada.

அச்சுப்பதிப்பு : சன்சைன் கிராபிக்ஸ், கே.கே.எஸ் வீதி, இணுவில்.
Printing Sunshine Graphics - K.K.S Road, Inuvil.

அட்டைப்படம் : கணியன்
Cover Art Kaniyan

பக்கம் : vii + 104
Pages vii + 104

விலை : ரூபா 100/=
Price Rs. 100/=

## கிடைக்குமிடங்கள்

1. அறிவமுது பொத்தகசாலை, யாழ் சாலை, கிளிநொச்சி.
2. பூபாலசிங்கம் புத்தகசாலை, பேருந்து நிலையம், யாழ்ப்பாணம்.
3. ஸ்ரீலங்கா புத்தகசாலை, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
4. Book Lab, பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.

# பதிப்புரை

பொன்னெழுத்துப் பதிப்பகத்தின் முதலாவது வெளியீடான பண்டிதர். 'ச.வே.ப' வின் தமிழிலக்கணப் பூங்கா 4 பதிப்புகள் மூலம் இதுவரை 5500 பிரதிகள் விற்பனையாகி யுள்ளன. இப்பொழுது அவர் எழுதிய 4 கவிதை நாடகங்களைத் தொகுத்துப் "பஞ்சாட்சரம் பா நாடகங்கள்" என்ற பெயரில் வெளியிடுகின்றோம்.

இலக்கிய ஈடுபாடு குறைந்து காணப் படும் இன்றைய இளைய தலைமுறையை இலக்கியங்களின்பால் கவர்ந்திழுப்பதற்குச் சமகால மனோநிலைகளை - பிரச்சினை களைப் பிரதிபலிக்கும் பாடுபொருள்களை, இனிய எளிய நெகிழ்வான மொழிநடையில் வழங்கும் உருவச் செழுமை கொண்ட நூல்கள் இன்று இங்கு நிறைய வெளிவருதல் அவசியமாகும்.

இத்தகைய உள்ளடக்க, உருவச் சிறப்புக்கள் அமைந்தவை என நாம் நம்பும் இந்த நாடகங்களை, இயன்ற மட்டில் கவர்ச்சியான நூலாக வடிவமைத்து வாசகர் களுக்கு வழங்குகிறோம். இப்பணிக்கு உதவும் வகையில் இந்நூலுக்கு அறிமுகம் வழங்கிய கவிஞர் ஜெ.கி.ஜெயசீலன் அவர்கள்,

இந்நூலைச் சிறப்புற அமைப்பதில் அதீத அக்கறை செலுத்திய இணுவில் சன்சைன் கிரபிக்ஸ் அச்சகத்தினர், முதலியோருக்கு எமது மனம் நிறைந்த நன்றிகள்.

பொன்னெழுத்துப் பதிப்பகம், **ப.வேழத்தெழிலன்**
இணுவில் மேற்கு,
சுன்னாகம்,
இலங்கை.

# நினைவுச் சமர்ப்பணம்

தம் இறுதி மூச்சுவரை, ஈழத்தமிழ்த் தேசிய கலை,
இலக்கியங்களையும், கலைஞர்கள்,
படைப்பாளிகளையும் நேசித்தும், மதித்தும்,
ஊக்கியும் உழைத்த நாடகப்பேராசான்
கலைப்பேரரசு அமரர் A.T.பொன்னுத்துரை
அவர்களின் ஞாபகத்தை இந்நாடகநூல் தூண்டி
நிற்பதாக!

ச.வே.ப

* * *

# முகவுரை

எனது பிரதியாக்கத்தில் உருவான ஏறக்குறைய 20 சமூக, சரித்திர நாடகங்கள் பொதுவிழாக்களிலும், கல்லூரி நாடக விழாக் களிலும், தமிழ்த்தினப் போட்டிகளிலும் மேடை யேறியுள்ளன. பல நாடகங்கள் பரிசும் பெற்றன. மேடையேற்றங்களின் போதும், இடப் பெயர்வுகளின் போதும், அந்நாடகங்களுள் அநேகமானவை கைதவறிப்போய்விட்டன. எஞ்சியவற்றுள் 4 கவிதை நாடகங்கள் இத் தொகுதியில் இடம்பெறுகின்றன.

இவற்றுள் பாடினியென்னும் நெடிய நாடகம் இற்றைக்கு 38 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1967 இல் இயற்றப்பட்டது. சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து, நாம் தமிழர்கள் என்று ஈழமக்கள் வாழ வேண்டும் எனும் ஆன்மார்த்தமான வேட்கையோடு பாடப்பட்டது. அத்துடன் கவிதைச் சுவையூடு தமிழ் ரசனையை - தமிழ்க்காதலை இளைய தலைமுறை நெஞ்சங்களிலும் ஊற்றெடுக்கச் செய்யவேண்டும் என்ற உந்தலால் சொல்லின்பம், பொருளின்பம், உணர்வின்பங்களைத் திட்டமிட்டுப் புகுத்திப் பாடப்பட்டது. பாடினி படிக்க மட்டுமே பொருத்தமானதாக அமைந்துள்ள அதே வேளை, சிகண்டி, தாயும் பேயும், பூக்கும் புரட்சிகள் ஆகிய 3 நாடகங்

களும் பல்வேறு சந்தங்கள் கொண்டவை; படிக்கமட்டுமன்றி, நடிக்கவும் பொருத்த முடையவை. சில நடிக்கப்பட்டுப் பரிசும் பெற்றவை.

கைதவறிப்போன என் கவிதைகள், நாடகங்கள், நாவல், சிறுகதைகள் போக எஞ்சியவற்றில் 90 வீதமான படைப்புகள் இதுவரை நூல்களாக அச்சிலோ, இறுவட்டுக் களிலோ, இணையத் தளங்களிலோ ஏறி ஆவணங்களாகிவிட்டன. இனி அவை நிலைப்பதும், மறைவதும் அதனதன் தரத்தையும், இரசனையையும் காலத்தின் தேவையையும் பொறுத்ததேயாகும். இவற்றைவிட என்னாற் பாடப்பட்ட 30 வரையான வீரகாவிய நூல்கள் நினைவு மலர்களாக வெளிவந்துள்ளன. பத்திற்கும் மேற்பட்ட கல்லூரிக் கீதங்கள், நிலைய கீதங்கள் இசைக்கப்பட்டு வருகின்றன.

யுத்தப் பயங்கரங்களின்போது, போட்டது போட்டபடி விட்டோடிய சந்தர்ப்பங் களில், தாம் காலமெலாம் தம்முடல் உயிர் களை உருக்கிப் படைத்துக் கையெழுத்துப் பிரதிகளாகவே வைத்திருந்த தங்கள் இலக் கியங்களைக் கூடக் கைதவறி முற்றாக அழிந்துபோகவிட்டு, இன்றும் வேதனையில் வெந்துகொண்டிருக்கும் என் யாழ்குடாச் சகோதர எழுத்தாளர் பலரின் துயரம் எங்கள் தேசிய இலக்கியத்தின் துயரமுமாகும்.

என் படைப்புக்களில் 1995 அக்டோபர் 31 வரை நூலுருப்பெறத் தவறியிருந்த பிரதிகள் அடங்கிய பொதியை அவலமயமான செம்மணிச் சடுதி இடப்பெயர்வின்போது யாழ் பல்கலைக்கழகச் சூழலில், ஒரு வீட்டில் மறைத்து வைத்து 2 நாள் நகர்ந்து நெல்லியடியைச் சென்றடைந்தோம். ஓரிரு நாட்கள் கடந்த நிலையில், அந்த எழுத்துப்பொதி பற்றி என்னைவிடவும் அதிக கவலையடைந்த என் மகன் ஒருவன் - வேழத்தெழிலன், யார் தடுத்துங் கேளாமல், எறிகணை முழக்கத்தின் மத்தியிலும், கொட்டும் மழையில் நனைந்தபடி மிதிவண்டியில் நெல்லியடியிலிருந்து திருநெல்வேலி வரை பயணித்து, அந்தப் பொதியை மீட்டுவந்து தந்தான். அவ்வாறு ஒரு மனித உயிரைப் பணயம் வைத்து மீட்கப்பட்ட என் இலக்கியப் படைப்புக்களை முற்றாக அச்சிட்டுப் பாதுகாத்து வைக்கும் வரை நான் ஓய்ந்திருக்க நினைப்பது அநீதியாகும்.

மீண்டும் ஒரு யுத்த அவலம், கறையான், இயற்கையின் சீற்றங்கள் - இவற்றினூடும் பாதுகாக்கப்படும் பிரதிகள் கூட, படைப்பாளி இல்லாத காலத்தில் அவனது பிள்ளை, பேரப்பிள்ளை, மாணவன், இலக்கிய ஆர்வலன் ஆகியோரால் அச்சேற்றப்படும் போது, தப்பும் தவறுமாக - இறுதி மெருகூட்டல்கள் (Final touchings) பெறாமலே நூலாகி,

முழுமையான பயனைத் தரத் தவறநேரும். இவ்வாறு அழிவையோ, வழுக்களையோ, குறிப்பாகப் படைப் பிலக்கியம் சந்திப்பது ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியையும், தேசிய வாசகர் தொகையையும், சமூக மேம் பாட்டையும் படுமோசமாகப் பாதித்துவிடும் என்ற சிந்தனை என் போன்றவர்களுக்கேனும் ஏற்படுவது அவசியமாகும்.

நிறைவாக, இக்கவிதை .நாடக நூலுக்கு அறிமுகம் வழங்கிய எண்ணுவது, பேசுவது, எழுதுவது, கனவு காண்பது எல்லாமே கலை இலக்கியம் எனக்கொண்ட **கவிஞர் ஜெ.கி.ஜெயசீலன்** அவர்களுக்கும், இந்நூலை விரைந்தும், நேர்த்தியாகவும், கவர்ச்சியாகவும் அச்சிட்டு வழங்கிய **இணுவில் சன்சைன் கிரபிக்ஸ்** அச்சகத்தாருக்கும், குறிப்பாக **வே.செந்தில்வேல்** அவர்களுக்கும் நான் என்றும் கடமைப்பாடுடையேன்.

**ச.வே.பஞ்சாட்சரம்**

இணுவில் மேற்கு,
சுன்னாகம்.
15.08.2005

# சிகண்டி

**(உருவாக்கம் - 1997)**

## காட்சி : 1

இடம் : குருசேத்திரப் போர்க்களத்தில் பாண்டவர் பாசறை.

நேரம் : இரவு.

பாத்திரங்கள் : கண்ணன், தருமன் முதலான பாண்டு மைந்தர்கள்.

(கண்ணன் சலனமற்றவனாய் அமர்ந்திருக்க, பாண்டவர்கள் அவனைச் சூழ்ந்து சோர்ந்த முகங்களுடன் உட்கார்ந்திருக்கின்றனர்).

தருமன் : (எழுந்து நின்று)

பாண்டுவின் மைந்தரும்
பார்அர சாண்டிட
வைத்திட வந்த பிரான் - கண்ணன்
பாதங்கள் போற்றி போற்றி!
வேண்டாமிப் போரென்று
வேண்டினேன் கேட்டாரா?
வேதனை தேடிவிட்டோம் - போரில்
வீழ்ந்திடல் நிச்சயம் நாம்!

ஒன்பது நாள் செய்த
உக்கிரப் போரினில்
ஒழிந்தது நம்படையே - தோற்றே
ஓடவும் போகிறோம் நாம்!

என்பெரும் பாட்டனாம்
வீட்டுமன் கைகளே
எம்படை தேய்க்கிறது - கண்ணா
என்செய லாம் உரைப்பீர்!

(வேறு)

கண்ணன் : கவலை வேண்டாம் தர்மா! கேள்!
கையோங் கியதோ இன்றுவரை
கவுரவர் படைதான்! என்றாலும்
கதைமா றிடலாம் தொடர் போரில்!
துவம்சம் செய்து கௌரவரைத்
துரத்தல் கூடும் பாண்டவர் நீர்!

தருமன் : அவர், அவ் வீட்டுமர் உள்ளமட்டும்
அதுவீண் கனவே! பகற்கனவே!

கண்ணன் : ஒழித்துக் கட்டிட் டால்அவரை
ஓங்கும் உங்கள் கையேதான்!

தருமன் : ஒழித்துக் கட்ட ஓர்வழியும்
உண்டோ உலகில் மாயவரே?

கண்ணன் : ஒழித்துக் கட்ட வீட்டுமரை
ஒருவரி னாலும் முடியாது!
ஒழித்துக் கட்ட வல்லவரே
ஓ! ஓ!அந்த வீட்டுமரே!

தருமா நீபோய் வீட்டுமரைத்
தாத்தா, பாட்டா எனப்பணிவாய்
"தருமா றெமக்கெம் மணப்பங்கைச்
சாற்றி னீர்கள் கௌரவர்க்கு!"

தருமன் : சரிதான் அவர்கள் கேட்காமல்
தாத்தா வையவ மதித்தார்கள்!

விரைந்தே போருக் கெமையழைத்து
வீட்டுமர்க் கீந்தார் படைத்தலைமை!

வீமன் : நீசப் படையின் தலைவனுமாய்
நீதிப் படையை அழிக்கின்றார்!
பாசப் பாட்டன் கௌரவர் போல்
பாண்டு மைந்தர் களுக்குந்தான்!,

தருமன் : மாசு தான்அவர் பெருமைக்கு!
மடக்க வேண்டும்! வழியென்ன?

யோசனை சொல்க வீட்டுமரை
ஒழிக்க இன்றேல் ஒதுக்கிடவே!

கண்ணன் : தந்திரம் ஒன்றே உளதிங்கு!
தருமா நீபோய் அவரிடமே
சந்திர வம்சத் தந்தைநீ
சார்ந்தாய் பாதிக் கௌரவரை!
இந்தப் பாதிக் குதவிடலும்
எம்பாட் டாவுன் கடனாகும்!
சிந்தை யிரங்கி உமைவெல்லும்
உபாயம் எமக்குச் செப்புமென்று

தருமன் : கேட்க வேண்டும்! சரிதானே?
கேட்பேன் இந்தக் கணமே போய்!

கண்ணன் : கேட்டு வருக! அவ்வழியில்
கிடைக்கும் வெற்றி போதருமா!
வீட்டுமர் தான்நும் படைக்குதிரை,
யானை, வீரர், தேரையெல்லாம்
நாட்சில வற்றுள் பெருமளவில்
நாசமாக்கித் தொலைத்திட்டார்!

"திரை"

---

## காட்சி : 2

இடம் : குருசேத்திரப் போர்க்களத்தில் வீட்டுமர் கூடாரம்.

நேரம் : இரவு

பாத்திரங்கள் : வீட்டுமர், மெய்க்காவலர்கள், தருமன்

(வீட்டுமர் சிந்தனையில் ஆழ்ந்திருக்க, தருமன் வெறுங் கையனாகக் கைகட்டிப் பணிவோடு வீட்டுமர் முன்னால் வந்து நிற்கிறான்).

வீட்டுமன் : தருமனே? வா! வா!என்றன்
சந்ததிக் கொழுந்தே வாடா!
இரு அந்த ஆச னத்தில்!
என்னடா வேண்டும் பிள்ளாய்!

தருமன் : இரவென்றும் பாரா திங்கே
ஏன்வந்தேன் என்றால் பாட்டா

ஒருசந்தி ரன்வம் சத்தின்
உயிர்காக்கும் வழிகேட் கத்தான்!

வீட்டுமன் : விளக்கமாய்ச் சொல்லு பேரா!
மிளிருஞ்சந் திரவம் சத்தின்
வெளிச்சத்தைப் பெருக்க வென்றே
வீட்டுமன் உயிர்வாழ் கின்றேன்!

தருமர் : பழிப்பதற் கெய்தும் வண்ணம்
பாண்டவர் நூற்றுவர்கள்
களத்தினில் மோது கின்றோம்!
கண்டுல கிகழும் எம்மை!

வீட்டுமன் : உண்மைதான்! என்ன செய்வோம்?
ஒருபக்கம் ஒதுங்கில் அன்றி
திண்ணிய நமது வம்சம்
சிதைந்திகழ் வுறலாம் தர்மா!

தர்மன் : அண்ணலே பாட்டா நீவிர்
அன்றொரு தர்மம் சொன்னீர்!
உண்மையில் பாதித் தேசம்
உரியது பாண்ட வர்க்கே!

நல்குக பாதி தானே
நம்பிகாள் எனவு ரைத்தீர்!
வில்முறி விதுரர், பூட்டன்
பாகிலிகன் போல் மேலோர்

சொல்லினர் இதனை! ஏற்காத்
துட்டரே போர்க்கி முத்தார்!
இல்லையா மார்க்கம் போக்க
இப்பழிப் போரைப் பாட்டா?

வீட்டுமன் : கெடுகுடி சொல்கே ளாது
கிளம்பிய தழியத் தானோ?
தருமன் : உடன்நின்றே உதவில் நீங்கள்
ஒழிவதெம் குலமே யன்றோ?
வீட்டுமன் : கடமைக்காய்ச் செஞ்சோற் றுக்காய்க்
கடன்கழித் திடப்போர் செய்தேன்!
தருமன் : கொடிதுண்ட கடனைத் தீர்க்கக்
குலத்தினை அழித்தல்! சோறும்

பாதிபாண்ட வர்க்கு ரித்தே!
பரம்பரைச் செஞ்சோற் றுக்காய்,
சோதிசால் மதிக்கு லத்தின்
சுடர், நீதி பேணல் வேண்டி
நீதிக்காய் நிற்கும் எங்கள்
பக்கம்நீர் நிற்றல் விட்டு,
தீதுற அறமே எம்மைச்
சிதைக்கின்றீர் கொடியோர்க்காக!

வீட்டுமன் : என்னநான் செய்தல் வேண்டும்
எங்குலப் பெருமை காக்க?

தருமன் : என்னரும் பாட்டா இன்றே
எம்பக்கம் சேரல் வேண்டும்!
அன்னது செய்யீ ராகில்
அகலுக களத்தை விட்டே!
அன்னதுஞ் செய்யீ ராகில்
அறைக ஓர் உண்மை ஈங்கு!

வீட்டுமன் : சத்திய விரதனே நான்!
தயங்கிடேன் உண்மை சாற்ற!
தருமன் : உத்தமப் பாட்டா! சொல்வீர்!
உமைவெல்லும் உபாயம் யாது?
வீட்டுமன் : இத்தரை என்னை வெல்ல
எவர்க்குமே இயலாதப்பா!
சுத்தவீ ரன்நான்! ஆனால்
தூக்கிவில் லம்பு வந்து

---

யாரும்பெண் ணெனையெ திர்த்தால்
ஆயுதம் வீசி நிற்பேன்!
கூரம்பு வீழ்த்தும் என்னை!
கொலஎனை அதுவே மார்க்கம்!
ஒரொன்பான் நாட்கள் போரில்
உதவிட்டேன் ஒருபா திக்கு!
பேரா, அச் சிகண்டி என்பாள்
பெருஞ்சினம் என்மீ துள்ளாள்!

தன்வாழ்வை அழித்தேன் என்று
சாக்காட்டச் சபதம் பூண்டாள்!

என்மீது கணைதொ டுத்தால்
எதிர்த்திடேன்! இறப்பேன்! நீபோய்
பொன்போலிவ் வாய்ப்பைக் கொண்டு
போர்க்களத் தென்னை வீழ்த்து!
உன்மதிக் குலப்பா திக்கென்
னுயிர்தந்து கடன்க ழிப்பேன்!

தருமன் : நன்றியென் பாட்டா நன்றி!
நம்பாட்டன் உங்கள் தம்பி
அன்றம்பைக் கிழைத்த தீமை
யாற்குற்றப் பட்ட நீங்கள்
இன்றுங்கள் பழிதீர் பாங்கில்
இணங்கினீர் நீதித் தொண்டில்!
சென்றுநான் வருகின் றேன்! ஆம்!
திகழ்த்தினீர் மதிக்கு லத்தை!

"திரை"

---

## காட்சி : 3

இடம் : பாண்டவர் பாசறை
நேரம் : நள்ளிரவு
பாத்திரங்கள் : தருமன், ஏனைய பாண்டவர், கண்ணன்

(கண்ணனும் வீமன் முதலானோரும் தருமன் சென்ற திசைமேல் விழிவைத்துக் காத்திருக்க, தருமன் உற்சாகத்தோடு துள்ளியாடி வருகின்றான்)

கண்ணன் : வருக தருமா வருக! மார்க்கம்
எதுவும் உண்டோ சொல்!

தருமன் : அருமை கண்ணா அருமை! எல்லாம்
அருமை வெற்றிதான்!
வீட்டு மர்தமை வீழ்த்திப் போரில்
வெற்றி ஈட்டிட நாம்
மார்க்கம் காட்டித்தந்தார் பாரீர்!
கடிய பகையாளி....

கண்ணன் : அம்பை என்பாள் அரசன் ஒருவன்
காதலி யாம்! அவளைத்
தம்பிக் காகக் கடத்தித் தவிக்க
அகதி யாக்கினராம்!
நிர்க்கதி யாக்கிய நீதான் என்னை
ஏற்றிட வேண்டுமெனக்
கர்ச்சனை செய்த அம்பையைக் "கட்டேன்
கடிமணம்" என்ற பழஞ்

சத்திய விரதந் தன்னால் தழுவிட
மறுத்தாராம் வீட்மர்!
அத்தினம் சபதம் பூண்டுனை அழிப்பேன்
என்றழு தேசீறித்
தகும்ஆண் வடிவம் தரவரங் கேட்டுத்
தவத்தினி லாழ்ந்தாளாம்,
சிகண்டி யாணுடல் தெய்வம் வழங்கப்
பெற்றா ளாம்அம்பை!

தருமன் : அப்படியான அவளை அழகாய்க்
கையாண் டிடலாம்நாம்!
இப்பொழு தேஆள் அனுப்பி அவளை
இவ்விடம் கூப்பிடுவோம்!
நாளைப் போரில் அவளை முகப்பில்
நலமாய் நிறுத்திவிடில்
ஆளைக் கண்ட மட்டில் எறிவார்
ஆயுதம் நம்பாட்டன்!

பார்த்தன் சிகண்டி பின்னால் நின்று
பாட்டனை அம்புகளால்
தீர்த்துக் கட்டல் வேண்டும்! தீர்த்தால்
வெற்றி நமக்காகும்!
மாலுமி இல்லாக் கப்பல், உச்சி
மரம்நீங் கியகூடு
போலிறும் பகைவன் சேனை! வெற்றி
போரில் நமதாகும்!

"திரை"

---

**காட்சி : 4**

இடம் : குருசேத்திரப் போர்க்களம்

காலம் : காலைப் பொழுது

பாத்திரங்கள் : பாண்டவர், சிகண்டி, கௌரவர் வீட்டுமர்.

(10ஆம் நாட் போரில் பாண்டவர் சேனையும், கௌரவர் சேனையும் எதிரெதிராக அணிவகுத்துப் போரிட்டு நிற்கின்றன. சிகண்டி ஆயுதந்தரித்துப் பாண்டவர் படையின்

முன்னணியில் நிற்கிறாள். எதிரில் துரியோதனன் படைக்குத் தலைமை தாங்கிப் போரிட்டு வீட்டுமர் நிற்கிறார் சடுதியில் வில்லை விட்டெறிகிறார்)

சிகண்டி : சத்திய விரதா வீட்டுமக் கொடியா
தண்டிக்க வந்துளேன் அம்பை!
இத்தினம் உன்னைப் பலிகொண்டிடவே
ஏந்தினென் கையில்வில், அம்பை!
பெண்களை மண்ணில் பிடித்தபொம்மைகள்!
பேய்ச்சிகள் எனநினைத் தாயோ?
எண்ணிய வரன்நான் எய்தவொட்டாமல்
இழுத்துவந் தந்தரிப் பித்தாய்!

சுயம்வர மண்ட பத்தினில் எம்மைத்
துட்டனே கூட்டிநீ அள்ளிப்
பயங்கரஞ் செய்தாய் மூவர்பெண்
ணெமக்கு!
பாழடித் தாய்நம் வாழ்வை!
அம்பைஎன் னோடும் அம்பிகை, அம்பா
லிகையெனும் தங்கையர் தங்கள்
சம்மத மின்றிக் கடத்தினை தேரில்
தம்பிக்குப் பலபெண்டிர் தரவே!

எம்விருப் பின்றி எமைக்கடத் திட்டாய்!
இதுஒரு பயங்கர வாதம்!
மும்மனை வியரோர் ஆணுக்கு வழங்க
முற்பட்ட பயங்கர வாதம்

காதலன் என்னைக் கைவிடக் காலாய்க்
கடத்திய பயங்கர வாதம்
ஏதிலி யாக்கிப்பின் என்னைக்கை விட்ட
இளையவன் பயங்கரவாதம்
வென்றிட முடியா தெமையனும் வீற்றில்
மேற்கொணடீர்! பயங்கரவாதீ!

இன்றென்றன் விரதம் எய்திட வெற்றி
இறந்தழி வாய்இது திண்ணம்!
சத்திய விரதன் நீமட்டும் அல்லை!
சத்திய விரதிநா னுந்தான்!
சத்திய விரத வெற்றிபெண் ணுக்கும்
சார்முதற் சரித்திரம் படைப்பேன்!
என்கையால் உன்னைக் கொன்றிடச் சபதம்
ஏற்றஅன் றேஅதில் வெல்ல

வன்மன ஆணின் வடிவுற முதலில்
மாதவஞ் செய்துவென் றிட்டேன்,
சிகண்டியென் னாணின் தேகத்தை! இதனால்
இரக்கப்பெண் சிறுமையும் தீர்ந்தேன்!
யுகமிது கலிதான்! ஆயினும் அறமே
உற்றிடும் இறுதிவெற் றியினை!
பெண்ணொடு பொருதல் பேடிமை என்பாய்!
பெண்மையை அங்கும்நீ பழித்தாய்!

திண்ணிய சிகண்டி ஆணின்று நானும்!
திரும்பவும் ஏந்திடுன் வில்லை!

வலிமைகொள் செருக்கால் அரசுகள் செய்யும்
மறக்கொடும் பயங்கர வாதம்
குலவியே தோல்வி குப்புற வீழல்
குவலயம் கண்ணாரக் காண
வீட்டுமக் கொடியாவீழ் குவை! இந்த
மேதினி பார்த்துனைத் திருந்தும்!
போட்டவில் எடுப்பாய்! போரினில் இறங்கு!
பொடிபடும் பயங்கர வாதம்!

(அருச்சுனனும் உக்கிரமாகப் பொழிந்த அம்புகள் வீட்டுமர் உடலெங்கும் தைக்க அவர் தரையில் சாய்கிறார்.)

"திரை"

முற்றிற்று

# தாயும் பேயும்

(உருவாக்கம் - 1998)

**காட்சி : 1**

இடம் : ஸ்ரெல்லாவின் குடிசை
நேரம் : இரவு
உறுப்பினர் : ஸ்ரெல்லா, அவளது குழந்தை.

(கைவிளக்கு ஒன்று கட்டிலின் அருகில் எரிந்து கொண்டிருக்கிறது. கட்டிலிற் கிடந்து கால் கையடித்து அழுத குழந்தையைத் தூக்கிக் கொண்டு சென்று ஏணைக்குள் வளர்த்திய ஸ்ரெல்லா அதனை மெல்ல ஆட்டித் தாலாட்டுப் பாடுகிறாள்).

ஸ்ரெல்லா : தூங்கடா கண்ணே தூங்கு
சொகுசான மெத்தைமீது!
ஏங்கிட ஏதும் இல்லை!
எல்லாம் தருவன் ஈசன்!

ஆள்பவன் நீதி ராசன்
அப்பனோ தெய்வ நேசன்
வாழ்வெலாம் இன்பம் என்று
மகிழ்ந்து தூங்கு கண்ணே!

கண்ணே கண்ணின் மணியே
களித்தயர்ந்து தூங்கு!
விண்ணுள் இருந்து வந்த
விண்ணா தூங்கு தூங்கு!

ஏணையை ஆட்டுவதை ஆறுதல் படுத்திக் குனிந்து சற்று நேரம் குழந்தை முகத்தை உற்றுப் பார்த்த ஸ்ரெல்லா தன் கட்டிலருகில் சென்று படுக்கை விரிப்பை உதறி விரித்து இதம் பண்ணுகிறாள். மீண்டு வந்து உறங்கிக் கிடக்கும் குழந்தையைத் தூக்கிவந்து மெல்லப் படுக்கையில் கிடத்திப் பக்கத்தில் தானும் படுத்துக் கொண்டு விளக்கை அணைக்கிறாள்.

"திரை"

---

## காட்சி : 2

இடம் : அதே குடிசைப் படுக்கையறை

நேரம் : நள்ளிரவு

உறுப்பினர் : ஸ்ரெல்லா, குழந்தைப் பிணம்

(கும்மிருட்டில் ஸ்ரெல்லாவின் விசும்பல், அழுகை புலம்பல்கள் கேட்கின்றன.)

ஸ்ரெல்லா : ஏன்டா மகனே ஐயோ மகனே
ஏன்டா விறைத்துப் போனாய்?

(எழுந்து விளக்கைக் கொளுத்திப் பிள்ளையைத் தூக்கி உலுக்கிக்குலுக்கிச் சோரும் தலை, மூடிய விழிகள் கண்டு பதறிக் கதறுகிறாள்.)

நானென் செய்வேன் நான்என் செய்வேன்!
நடந்த தென்ன சாமீ!
ஆன தென்ன? ஐயோ என்ன?
ஆண்டவரேஎன் பிள்ளை

பேனான் தானோ? போயே விட்டான்!
பொல்லாப் பாவி யோநான்?

(பிள்ளையைத் திடீரெனத் தூக்கிமுகத்தோடு முகம் பார்த்து)

இதுஎன் பிள்ளை இல்லை, இல்லை!
என்பிள் ளைதான் எங்கே?
சதியே தோதான் சாமீ! ஓமோம்
சரியாய் ஜாஸ்மின் சேய்போல்
அன்றோ உள்ள திந்தப் பிள்ளை?
அவள்சேய் மாண்டான் நேற்றே!
நன்றாய்க் கள்ளி நடத்தி யுள்ளாள்
நாடகம் தன் சேய் மெய்
இங்கே வைத்தே என்சேய் தூக்கி.....
இந்தா போறே'ன் அங்கே!
எங்கே யுங்கொண் டோடிட் டாளோ?
ஈசா என்சேய் காப்பாய்!

(பிள்ளையைத் தூக்கிக் கொண்டு கதவைத்தள்ளித் திறந்து வெளியே ஸ்ரெல்லா ஓடுகிறாள்.)

"திரை"

---

## காட்சி : 3

இடம் : ஜாஸ்மினின் குடிசைப் படுக்கையறை

நேரம் : நள்ளிரவு தாண்டிய நேரம்

உறுப்பினர் : ஜாஸ்மின், ஸ்ரெல்லா, குழந்தை,

(ஸ்ரெல்லா ஜாஸ்மின் அறைக்கதவைத் தள்ளிப் பார்த்தும் திறக்காததால் தடதடவென அதைத் தட்டுகிறாள்.)

ஜாஸ்மின்: (உள்ளிருந்தபடி)
நட்டநடு ராவில் வந்து
தட்டுவதார் என்கதவை?

ஸ்ரெல்லா: தட்டுவது நான்ஸ்ரெல்லா
தான்டி! கத வைத்தி றப்பாய்!

ஜாஸ் : என்னவேலை இந்தநேரம்
இருக்கிறது? விடிந்த பின்வா!

ஸ்ரெல்லா: சொன்னாற் கேள் கதவைத்திற
சூழ்ச்சிக்காரி வஞ்சகியே!

(கதவு திறக்கிறது. ஸ்ரெல்லா குழந்தைப் பிணத்தை ஏந்தியபடி விறுக்கென்று உள்ளே நுழைந்து கட்டிலைப் பார்க்கிறாள். அவள் குழந்தைதான் அங்கே உறங்கிக் கிடக்கிறது)

ஸ்ரெல்லா: என்னஜாஸ் மின்? உன்றனுக்கும்
இத்துணை துணிச்சலோடி?
என்மனை புகுந்தென் சேயை
இப்படிக்க டத்திவந்தாய்!
உன்குழந்தை செத்ததென்றால்
ஊர்ச்சேய் திருடுவதோ?
என்மகனைத் தந்துவிடு!
இந்தாடி உன் செத்தபிள்ளை!

ஜாஸ்மின்: என்னடிபீ தற்றுகிறாய்,
அத்துமீறி ராவில்வந்து?
என்னைஏன்வெ ருட்டுகிறாய்?
இந்தப் பிள்ளை என்றன் சேயே!

ஸ்ரெல்லா: வாது வம்பு பேசிடாதே
வாடி எங்கள் மன்னனிடம்!
நீதித் தீர்ப்பெது வந்தாலும்
நீ, நான் அதனை ஏற்போம்!

ஜாஸ்மின்: உன்மகனை வைத்துக் கொண்டேன்
உன்மத்தம் நீஆடுகின்றாய்?

ஸ்ரெல்லா: என்னதில்லை! உன்சேய்இந்தா?
இந்தாமெத்தை மேலே வைத்தேன்!
தாடி என்றன் சேயை! இன்றேல்
வாடி நீதி மன்றிவுக்கு!

ஜாஸ் : போடிநானேன் வருதல் வேண்டும்!
புருடாக்காரி பேச்சைக் கேட்டு?

ஸ்ரெல்லா : ஆநீவர வில்லையென்றால்
அரசஏவ லாளன்வந்து
வாவென்றுனை இழுத்து
வழக்கில் மாட்ட வைத்திடுவேன்!

(ஜாஸ்மினின் கையிலிருந்து குழந்தையைப் பறிக்க ஸ்ரெல்லா முயல்கிறாள். ஜாஸ்மின் கத்துகிறாள். அயலவர்கள் ஓடிவந்து விலக்குத்தீர்க்கிறார்கள்)

அயல : அதிசயமிச் சண்டை அம்மா
அடிபடநீர் வேண்டாமிங்கே!
மதிவளம் மிகுந்த எங்கள்
மன்னர் சால மோனிடம்போம்!
தப்பில்லாத நீதித் தீர்ப்புத்
தந்திடுவார் சண்டை வேண்டாம்!

ஸ்ரெல்லா : இப்பொழுதே வாடிபோவம்!
என்மனம் தவிக் கிதையோ!

(இருவரும் குழந்தையுடன் வெளியேற அயலவர் பின்தொடரல்)

"திரை"

---

## காட்சி : 4

இடம் : மன்னர் சாலமோனின் அரசசபை

நேரம் : காலை

உறுப்பினர் : அரசர் சாலமோன், மந்திரிபிரதானிகள்
ஸ்ரெல்லா, ஜாஸ்மின், காவலர்கள்,
அறிஞர், குரவர் குழுக்கள்

(அரசர் அமைச்சர் முதலானவர்கள் உரிய உரிய ஆசனங் களில் அமர்ந்திருக்கிறார்கள், சேவகன் ஒருவன் வீரிட் டழும் குழந்தை ஒன்றைக் கையிலேந்திவந்து மன்னர் முன்னிலையில் கிடத்துகிறான். ஸ்ரெல்லாவும் ஜாஸ் மினும் அழுதபடி வந்து இருபக்கமும் நிற்கிறார்கள்.)

சாலமோன் : என்னசேவ கா, ஈதெல்லாம்?
ஏனிச் சேய்தான் அழுகிறது?
அன்னையற்ற பிள்ளை யோசொல்?

ஆரு மற்ற அநாதை யோசொல்!

சேவகன் : அன்னை இல்லாச் சேயே அன்று!
அரச ரேஇச் சேயைப் பெற்ற
அன்னை மாரோ இரண்டு பெண்கள்!
அதிச யம்இச் சண்டை வேந்தே!

(மன்னன் அதிர்ச்சியோடு ஸ்ரெல்லாவையும் ஜாஸ்மினையும் மாறிமாறிப் பார்க்கிறான். சபையிலுள்ள அனைவரது கண்களும் வியப்பால் விரிகின்றன.)

ஸ்ரெல்லா: எங்கள் வேந்தே! எங்கள் மன்னா!
எனது சேய்தான் இந்தப் பிள்ளை!

ஜாஸ்மின்: எங்கள் மன்னா! இல்லை இல்லை
என்றன் சேயே இந்தப் பிள்ளை!

ஸ்ரெல்லா: இந்தப் பெண்ணின் பிள்ளை நேற்றே
இருட்டிய பின் இறந்த தையா!
அந்தச் செய்தி நான றிவேன்!
அந்தத் துன்பம் மாற்றவென்று
சென்ற நள்ளி ராவில் அந்தச்
செத்த சேய்பி ணங்கொணர்ந்து
என்றன் பக்கம் இட்டு விட்டு
இருட்டில் என்றன் சேய்கடத்திக்
கொண்டு சென்றாள்! கொடுமை ஐயா!
கொடுங்கள் என்றன் குழந்தை கோவே!
மண்டி யிட்டு மன்றா டிட்டேன்!
வரண்டு வாய்சேய் அழுகிதையா!

ஜாஸ்மின் : இல்லை இல்லை எங்கள் வேந்தே
எனது சேயே இந்தப் பிள்ளை!
சொல்லு கின்றாள் பொய்யிவள்தான்
சும்மா நீலிக்கண்ணீர்விட்டு!

சாலமோன் : அதிச யத்துள் அதிச யந்தான்!
அகிலங் காணா விசித்திரந்தான்!
புதுமை யில்லை ஒருதாய் பெற்றால்
புத்தி ரர்கள் பத்துப் பேரை!
புதுமை யன்றோ ஒற்றைச் சேயைப்
புத்திர னாக இருபெண் ஈனல்!
எதனை நானும் சொல்வேன் தீர்ப்பாய்?
எவளிடத்தில் ஈவேன்சேயை!

சபையோர் : அற்பு தந்தான் அரசர் ஏறே!
ஆமாம் உண்மைப் பெற்ற தாயை
சொற்ப நேரந் தன்னுட் கண்டு
துவண்டு சோருஞ் சேய்க்குப் பாலை
ஊட்டு விக்கா விட்டாற் பாவம்
உயிரி ழக்கும் ஓஇச் சேயும்!

சாலமோன் : (தன்னுள்)
கேட்டு உசாவில் உண்மை சொல்லார்!
கிடைக்க மார்க்கம் கேட்டேன் ஈசா!

(மன்னன் வலக்கையை நெஞ்சில் வைத்துக் கண்களை இறுகமூடித் தியானிக்கிறான். திடீரென்று முகம் மலர்ந்து விழித்து)

சேவ காரீ கொண்டோ யேவா
தீட்டி நன்கு கூர்வாள் ஒன்று!
பாவம் தாய்மார் இருவ ருந்தான்!
பாதி பாதி யாகச் சேயை
உடனே ஆமாம் வெட்டு! வெட்டி
ஒவ்வோர் பாதி கொடுஇ வர்க்கு!

ஜாஸ்மின்: தடையே இல்லை! பாதிப் பிள்ளை
தந்தாற் போதும்! தாரும் வெட்டி!

ஸ்ரெலா : (பதறி)
வேண்டாம் வேந்தே வெட்ட வேண்டாம்!
மெய்யாய்ப் பிள்ளை எனதே அன்று!
வேண்டு மென்றே பொய்வா திட்டேன்!
வீம்புக் காரி பொய்யள் நானே!
பக்குவ மாகப் பாவஞ் சேயைப்
பரிந்த ளிப்பீர் அந்தத் தாய்க்கே!
விக்கியலறும் சேய்தன் பசியின்
வேதனையை விரைந் தொழிப்பீர்!

(மன்னன் அட்டகாசமாகச் சிரிக்கிறான். இருதாயர் முகங்களையும் மாறி மாறிப் பார்க்கிறான். ஸ்ரெல்லா வைப் பரிவோடு பார்த்து)

(வேறு)

சால : வா பெண்ணே! நீயேதாய்! மழலையினைத்
தூக்கு!
போ அங்கே மறைவுக்கு! புனிதப்பாலூட்டு!
(ஜாஸ்மினைப் பார்த்து)

தாவெட்டி என்றிட்ட சண்டாளி நீயோர்
பேய் அன்றோ? பெண்ணாநீ? பேதைச்சேய்
தன்னை
வீணாகக் கொலைசெய்ய விழைந்திட்ட
நீயோர்
ஆணாக இருப்பாயேல் ஆம்ண்கை வாளால்
துண்டாடித் தூக்கிப்போய்ச் சொறிநாய்க
ளுக்கே
கொண்டாட்ட விருந்தாகக் குவித்தே
இருப்பேன்!

(ஸ்ரெல்லா ஆனந்தக் குதூகலத்தோடு ஓடோடிப் போய்க் குழந்தையைத் தூக்கி மார்போடணைத்து உச்சியில் முத்தமிட்டபடி மறைவிடத்துக்கு ஓடுகிறாள்)

சால : (சேவகனைப் பார்த்து, ஜாஸ்மினைச் சுட்டிக்காட்டி)
சேவகனே இப்பெண்ணைச் சிறையினிலே
தள்ளு!
பாவிகளும் வஞ்சகரும் படுத்திவரும் பாட்டால்
அப்பாவி கள்பலரோ அழிந்துவரு கின்றார்!
இப்பாவி யின்கதைஇவ் விரும்புவிக்கோர் பாடம்!

சபை : மன்னர்சால மோன்நீதி மன்னர்புகழ்
வாழ்க!
இந்நிலத்தின் ஒளிவிளக்கே என்
றென்றும் வாழ்க!

"திரை"

முற்றும்

# பூக்கும் புரட்சிகள்

(உருவாக்கம் - 1998)

## காட்சி : 1

இடம் : இலங்கை அரச மாளிகை
நேரம் : இரவு
உறுப்பினர்கள் : சண்டிராசன், யுத்த அமைச்சர்

(சண்டிராசன் ஆடம்பரமான இருக்கையில் வீற்றிருக்கிறார். எதிரில் கம்பீரமாக அமைச்சர் இருக்கிறார்)

சண்டி : (எழுந்து நின்று)

சண்டிராசன் நானே! சண்டிராசன் நானே!
தந்திரங்கள் மயமாம் சண்டிராசன் நானே!
சிங்களரெம் நாடே சிறீலங்கா தானே!
தமிழன் இன்னும் இங்கே இருக்க
விடுவேனே?

புத்த தர்மம் வாழும்
புனித பூமி லங்கா!
போக்கறுந்த தமிழன்
புலிக்குமிங்கு பங்கா!
யுத்தவெற்றி கொண்டேன்
யுத்தவெற்றி கொள்வேன்!
பத்தினிபோல் வேடம்
பாரினைஏ மாற்றும்!

ஐக்கி யத்தினோடாம்
சமா தானம் ஆக்கும்
அழகுவெண்பு றாபோல்
அருளின் வேடம் தாங்கி,
கைக்குள் போடு வேனே
ஐ.நாவின் மன்று!
கவனமாகப் புலியின்
கதைமுடிப்பேன் வென்று!

(வேறு)

அமைச்சர்: நானென்று சொல்லாதீர்
நாமென்று சொல்லும்!
நானுந்தான் தமிழ்ரத்தம்
நயந்துகுடிக் கின்றோன்!
மாமாநல் மருமகன்நாம்
வரித்தகுறி ஒன்றே!
ஆமாம்தந் திரத்தாலே
அழிப்பம்தமி ழரையே!

சண்டி : யாழ்ப்பாணம் யாப்படுவ
ஆக்கிவைத்த மாமா!
வாழ்த்துகின்றேன் ஜெனரலென்று!
வம்சம்மறப் போமா?
துட்டகாமி னிதிரும்பத்
தோன்றினாரோ நீராய்?

ஒட்டவேதான்தமிழ்க் குடிகள்
ஒழித்துவெல்வம் பாரீர்!

(வேறு)

அமைச்சர்: தடைகள்பல போட்டுப் போட்டுத்
தமிழர்களைத் தளர வைத்து
யாழ்ப்பாணத்திற் சண்டையில் வென்றோம் -
அவரைக்
கொடைகள்மூலம் எங்கள் பக்கம்
குனிந்தபடி திரளவைத்துக்
குவலயத்தின் வாழ்த்தையும் பெற்றோம்
- புலியைக்
கூண்டோட ழிக்கவுங்கற்றோம்!

(வேறு)

சண்டி : அடிபணிய மறுத்துநிற்கும்
ஆணவங்கொள் வன்னியாரும்
தடைகளினால் தலைவணங்கவே -
உணவு வெட்டைத்
தடித்தனமாய்க் கடைப்பிக்கிறேன் -
ஆசைமாமா
தக்கபடி அடக்கி வெல்லுவேன்!

அமைச்சர்: யாழ்ப்பாண இளையோ ரெல்லாம்
அழிந்தொழுக்கம் மானம் வெட்கம்
பாழ்பட்டுப் பிரிவினைபற்றி - மறந்தெமது

பாதம்தொழும் அடிமையாக்குவோம்
- காம வெறிப்
படங்கள்குடி வகையனுப்புவோம்!

சண்டி : மிச்சமுள்ள தமிழர்களும்
எச்சில்நாய்கள் ஆகிவிட்டால்
வேருமிற்றுப் புலியழிந்திடும் -
ஸ்ரீ லங்காவில்
எச்சமின்றித் தமிழர் தம்மையும் - சிங்களவர்
இனத்தவராய் மாற்ற வாய்ப்பெழும்!

அமைச்சர்: ஏகசிங்க ஏஇலங்கா
ஏகயுத்த தம்மலங்கா
எங்கும் சிங்கக்கொடி பறக்குமே -
சிங்களர்க்கே
ஆகும்முழுத் தீவும் ராசனே! - அச்சமற
ஆளுவாய்நீ தீவைமேலுமே!

"திரை"

---

காட்சி : 2

இடம் : வன்னிக்காட்டிலுள்ள ஒரு குடிசை முற்றத்து மரநிழல்

நேரம் : மாலை 4 மணி

உறுப்பினர்கள் : வறிய, இடம் பெயர்ந்த தாய், 2 பிள்ளைகள், போராளி ஒருத்தி

(முற்றத்துப் பாலைமரத்தடியில் தாயும் பசித்துக் கதறும் குழந்தைகளும் போராளி ஒருத்ததியும் குந்தி இருக் கிறார்கள்)

பிள்ளைகள் : பழிபிடித்த சாதி நாமோ?
பசிவயிற்றைக் கிள்ளுதம்மா!
பழையகஞ்சி என்றாலும்தா
பதறியுடல் பதைக்கி தம்மா!

தாய் : என்குழந்தை குஞ்சுகளே!
என்னபாவம் செய்தோமடி!
பொன்விளைந்த வயலும்விட்டு
புரிந்துதவும் அயலும்விட்டு
அன்னியனின் படைகலைக்க
அகதிகளாய்க் காடுவந்தோம்!
என்னசெய்ய? பிழைப்பும் இல்லை!
இரவல்வாங்க உறவும் இல்லை!
இருந்தகாப்பு நகைகள் விற்று
இத்தனைநாள் கடத்திவிட்டோம்!
தரும்நிவார ணத்தைக்கூடச்
சற்றிரக்கம் கூட இல்லான்
இருந்திருந்து குறைத்துவந்தே
இல்லாமலும் ஆக்கிவிட்டான்!

1ஆம் பிள்ளை : மருந்துமில்லை மலேரியாவால்
வாந்தியாலே அழிகின்றோமே!
வருந்திநாளும் பிணிபஞ்சத்தால்
மடிகிறோமே! ஒழிகிறோமே!

2ஆம் பிள்ளை : ஓடியோடி எத்தனையூர்
உயிரைக்காக்கப் பார்த்தோம்! ஆனால்
வாடி வாடிப் பசியினாலே
மடியத்தானே போகின்றோம் நாம்?

கேடுகெட்ட தமிழனுக்காய்க்
கேட்கயாரும் இல்லையென்றே
போடுகின்றார் பட்டி னிக்குள்!
பொசுக்குகின்றார் தமிழர்எம்மை!

போராளி : கேட்பதற்கேன் யாரும் இல்லை?
கேட்கும் வலு எமக்கும் உண்டு!
கேட்கும் தேவை எமக்கே உண்டு!
கேட்கும்பொறுப் பெமக்கே உண்டு!
எங்கள் மண்ணைப் பறிப்பதற்கே
எதிரிக்குண்டு துணிச்சல் என்றால்
எங்கள் மண்ணைக் காக்க, மீட்க
எங்களுக்கேன் துணிச்சல் இல்லை?

1ஆம் பிள்ளை : ஆயிரம்நாள் அஞ்சியஞ்சி
அழுதழுது பசியில் வெந்து
நாயைப்போலச் சாதல் விட்டு
நாசகார ரையெதிர்த்துக்
கண்டே ஐ.நா.நீதிநாட்டக்
காரணமாய்ச் சாவதேமேல்!
சண்டையிங்கும் வந்தால் நாளை
தப்பி ஓட இடமுமுண்டோ?
குட்டக் குட்டக் குனிந்தோம் போதும்!
கொட்டமிடுங் கொடியர் வால்கள்
ஒட்டவெட்டி விட்டால் மிஞ்சி
உள்ளவர்கள் வாழ்வோம் நாளை!

பட்டினிகள் பயங்கள் தீரும்!
பணியவைக்கத் தமிழரெம்மைத்
திட்டமிட்டுப் பசியால் வாட்டும்
சிங்களமே திருந்தப்போ'றாய்!

(போராளி எழுந்து முன்னே செல்ல மூத்தபிள்ளை பின்தொடர்கிறாள். தாய் மௌனமாகக் கண்ணீர் வடிக்கிறாள்.)

"திரை"

---

## காட்சி : 3

இடம் : யாழ்ப்பாணத்தில் ஒரு களியாட்டக் கூடம்

நேரம் : முற்பகல்

உறுப்பினர்கள் : நாவிச்சை நரம்பிச்சைக்கடிமையாக்கப் பட்ட கல்லூரி உயர்தர மாணவர்கள் சிலர்

(குடிவெறியில் ஆடிப்பாடிக் கும்மாளமடிக்கிறார்கள்)

இளைஞர் கூட்டம் : (ஆடியாடி)
கொண்டாட்ட மானதடா
எங்கள்பாடு - நூறு
குடிவகைள் யாழில்தண்ணீர்
பட்டபாடு!
குண்டாழ மாகக்குடல்
குடிப்பமேடா - குடித்துக்
கூட்டமாகக் கும்மாளங்கள்
அடிப்பமேடா!

ஈழங் கேட்டுச் சண்டைசெய்வோன்
சிதறிச்சாவான்! - பேசா
தெங்களோடு சேர்ந்துகொண்டால்
சொர்க்கம் போவான்!
வாழும் புத்தி உய்யும் புத்தி
எமக்கேஉண்டு - ஈழம்
மானமென்று கிளம்பினோமோ
துண்டு துண்டு!
"திரை"

---

### காட்சி : 4

இடம் : ஆலய மண்டபம்
காலம் : மாலைப்பூசை முடிந்த நேரம் 5.00 மணி
உறுப்பினர் : மூத்த, இளம் இறையடியார்கள், ஓர் ஆசிரியர், சமயப் பிரசங்கி.

ஆசிரியர் : பரம்பரையாய் வளர்த்துக் காத்த
பண்பாடின்றோ யாழ்ப்பாணத்தில்
குரங்கின்கைப்பூ மாலை யாயிற்றே
- இதுவோர்
குசப்புத்தலை முறையுமாயிற்றே!
ஓர்இளை. : தம்பி கற்கப் பள்ளிக்கென்று
தானே நம்பி நாங்கள் வீட்டில்!
வெம்பல் மாங்காய்க் கூட்டமாயிற்றே!
- அட்சீ
வெறிவிழுங்கும் சடலமாயிற்றே!

இன்னொருவர் : சீரழிந்த தலைமுறையாய்ச்

செய்தெதிரி எம்மகாரைப்

போருணர்ச்சி புனிதமுங்கெட்ட - எச்சிற்

புழுக்களாக்கி விட்டானே அந்தோ!

ஆசிரியர் : பொறுத்திருந்தால் இனியும்நாமும்

புழுக்களாவம், பொறுப்புணர்ந்து

புறப்படுவோம் வீடுவீடாக - புகுந்து

புனித தமிழ்ப்பண்பை ஊட்டுவோம்!

---

ஒருவர் : மானமுள்ள மனித ராகப்

வாழத் தெரியாவிட்டாலும்

மானமுள்ளோ ராகச் சாகவே - துணிந்து

வாருங்கடா அறம்புகட்டவே!

நாடுநாடென்றீழப் பற்றை

நாம்வளர்க்கப் பீந்தி யேதான்

நாடுங்கெட்டு வீடுங்கெட்டதே - இன்னும்

நாறி வெட்கி அழுகிச் சாவதா?

அடு த்துவருந் தலைமுறைகள்

அடிமைகள்பேய்க் குஞ்சுகளாய்ப்

பொடிமெனிக்கே கால்கள் நக்கவோ - சிச்சீ

பூகம்பமாய்ப் போய்இடிக்குவோம்!

வேறொருவர் : எங்கள்குடா வீட்டிலெல்லாம்

எவனெவனோ வந்துகுந்தி

எங்களினை அடித்தகற்றவோ? - அந்
நிலையில்
எங்குபோவம்? இல்லையே கதி!

(வேறு)

ஆசிரியர் : அடித்துச் சுட்டுக் குண்டு வீச்சால்
அழித்தொருபக்கம் - எம்மை
அணைத்துக் கழுத்தறுத்து மெல்ல
அழித்தொருபக்கம்
பிடிக்க மண்ணைச் சூழ்ச்சி செய்யும்
பித்தர் செயல்களை - வாடா
பிடித்தராவி வலிமையோடு
பிசக்கி மீளுவோம்!

(மக்களின் முன்பாகக் குத்து விளக்குகள் சுடர் ஒளிபரப்பும் மேசையின் பக்கம், உருத்திராட்சமாலை, வெண்ணீற்றுக் குறிகளுடன் பிரசங்கி வந்து நின்று நமப்பார்பதிபதியே என்கிறார். சபை அரகர மகாதேவா என்று ஒலி கிளப்புகிறது.)

பிரசங்கி : இன்றைய பேச்சில்
இனிய மெய்க்கதை
ஒன்றினைக் கூறி
உரையைத் தொடர்வேன்!
மில்ரன் என்பார்
மேம்பட்ட ஆங்கிலத்
தொல்புகழ்க் கவிஞர்!
துன்புறும் வண்ணம்

கண்ணொளி மறைந்து
கபோதி யானார்!
கண்ணொளி யிழந்த
கவலைப் பெருக்கை
"இழக்கப் பட்ட
இன்துறக் கம்" எனச்
செழித்த காவியம்
ஆகத் தீட்டினார்!
மீண்டுபின் பார்வை,
மிக்க மகிழ்ச்சியால்
"மீண்ட சுவர்க்கம்"
எனவும் மீண்டும்
காவியம் ஒன்றால்
பாவளம் செய்தார்!

இழந்து பார்வை
அழுங்கிய காலை,
"உழைக்கா திருந்தே
உண்ணும் இந்தப்
பழிக்காட் பட்டேன்!
பாவிஎன் செய்வேன்?
கணக்கை எவ்வாறு
இணக்கிநான் தருவேன்?"
எனவே இறைவனை
இரந்தழு திட்டார்!

மனதுள் ஒருகுரல்
மறுப்பாய்க் கேட்டது!
"என்ன நிலையில்
உன்னைவைத் தேனோ
அன்னதில் இயன்றதை
ஆற்றுக! அதுவே
உன்னுயர் கணக்கும்!"
உரையிது கேட்டே
இறையேத் துதலே
முறையெனக் கொண்டார்!
வேண்டித் தொழுதார்
மீண்டது பார்வையும்!

அங்கிங் ககலரும்
பங்கச் சிறையுள்
யாழ்குடாத் தமிழர்
வாழ்நிலை இன்று!
போர்ப்பயத் தாலுளம்
யார்க்குமே நடுக்கம்!
செய்வகை அறியார்!
உய்வகை அறியார்!
மந்தைக ளாகச்
சிந்தைக் குழப்பம்!
குடியர் மலிந்தார்!
அடியர் குறைந்தார்!

இனங்கெடல் அறியார்
மனம்போம் போக்கில்
அலைகிறார்! மெல்லத்
தொலைகிறார் வாழ்வு!
தலைமுறை ஆயிரம்
தலைச்சுமந் தீந்த
பண்புகள் தம்மை
மண்புகுத் துகிறார்!
நரகக் குழியிற்
கருகுற விவர்க்காய்
உருகிப் பொருமும்
பெருமைக் குரியீர்!
ஊமை நிலையீர்!
ஆமை நிலையீர்!
இறைவன் வைத்துள
இன்றை நிலையில்
இறைவர்க் கீவிர்
எந்தக் கணக்கை?
ஆதித் தமிழன்
அறைமெய் யறம்தான்
“தீதும் நன்றும்
பிறர்தர வாரா”
ஈதே உண்மை!
எனவே இன்றெம்
தீதாம் அனைத்தும்
செய்தஎம் பழிக்கே!

இனிநாம் நன்மை

எய்தும் வகையில்,

மனம்மொழி மெய்யால்

மாண்பவே செய்வோம்!

முயல முயல

இயலும் வெல்லல்!

பாவமன் னிப்புத்

தாவெனத் தொழுவோம்!

உயிர்ப்பலி இன்றிச்

துயர்ப்பழி இன்றி

எங்கள் மண்ணும்

எங்கள் வாழ்வும்

எங்கட் காகும்

எங்கட் காகும்!

"திரை"

முற்றும்

---

# பாமினி

(உருவாக்கம் - 1967)

## காட்சி : 1

இடம் : நீர்கொழும்பிலுள்ள அரசாங்க மருத்துவ மனை ஆலோசனை அறை
நேரம் : பகல் 11 மணி
உறுப்பினர்கள் : டாக்டர் மேரி, நோயாளி சூசைப்பிள்ளை, வேறும் டாக்டர்கள், நோயாளிகள்.

(மேரி மருத்துவ உடையில் மேசையின் ஓர் அந்தத்தில் அமர்ந்திருந்து ஒரு நோயாளியைப் பார்வையிட்டு மருந் தெழுதிக் கொடுத்து அனுப்பி அடுத்த நோயாளியின் வருகை நோக்கிக் காத்திருக்கிறாள். முதியவரான சூசைப்பிள்ளை தள்ளாடிக் கொண்டு வருகிறார். மேசையின் மறு அந்தத்தில் இன்னொரு டாக்டரும் நோயாளியும் காணப்படுகின்றனர்)

மேரி : இப்படி அமர்க! ஊர்பேர்கள்
எவையோ?
சூசை : பெயர்சூ சைப்பிள்ளை
இப்பொழு திங்கு நீர்கொழும்பு.
இதற்கு முன்னர் மயிலிட்டி.
மேரி : (சிரித்து)
அப்படி யா?
(பின்பு எதையோ உணர்ந்தவளாய்த் திடுக் கிட்டு அவரை உற்று நோக்கி மனதுள்)
ஓ! அவரேதான்!
ஐயோ என்ன கோலமிது?
அப்படி அந்த அறையில்போய்
அமர்க சற்றுப் பெரியவரே!

(சூசை எழுந்து சென்று அந்த அறையில் அமர்கிறார். மேரி அவரைப் பின் தொடர்ந்து உள்ளே போகிறாள்)

மேரி : ஐயோ அப்பா! அப்பா!
சூசை : ஏன்
அழுகின் றாய்!நீ யார்மகளே?
மேரி : மெய்யாய் என்னைத் தெரியாதோ?
மேரி உங்கள் மகளப்பா!
சூசை : பொய்யோ என்றன் கண்காது?
மேரி : பொய்யே இல்லை மெய்யப்பா!
சூசை : ஐயோ மகளே உன்னருமை
அறியாப் பாவி நானம்மா!

மேரி : அப்பா இங்கேன் வந்தீர்கள்?
அதுவும் இந்தக் கோலம் ஏன்?
தப்பாய் ஏதும் நடந்ததுவோ?
தம்பி, அண்ணன் மாரம்மா
இப்பொழு தெங்கே? மௌனம் ஏன்?
சூசை : இறந்து விட்டாள் உன்னம்மா!
மேரி : அப்பா எந்தப் பிறவியிலே
அம்மா வைநான் காண்பதினி?

சூசை : தம்பி மாரைப் படிப்பித்துத்
தக்க பதவி களில்வைத்தே
ஐம்ப தறுப தாயிரங்கள்
அள்ளிச் சீதனம் பெறுவித்து
நம்பி வீடு வாசல்களை
நான்பங் கிட்டு நல்கிவிட
தம்பெண் டிர்மார் ஏவலினால்
தள்ளினர் என்னைத் தெருவினிலே!

மானங் கெட்ட பின்னூரில்
வாழ என்னால் முடியாமல்
நானிங் கோடி வந்துள்ளேன்
நாளும் வயிற்றுச் சோற்றுக்கு

மீனைத் தேடும் வலைஞருடன்
வேலை செய்து வருகின்றேன்!

மேரி : நானுங் கள்கால் விழுகின்றேன்!
நலிவற் றெம்மோ டிருந்திடுக!

சூசை : மேரி! என்றன் அருமகளே!
வேண்டும் வேண்டும் பொருளென்றே
ஊரை ஏய்த்துச் சேமித்தேன்!
ஒன்றும் எனக்கோ உதவவில்லை!
ஈரம் இல்லா நெஞ்சர்க்கோ
என்ன இருந்தும் தீங்கேதான்!
ஈரமுள்ள நெஞ்சினரோ
ஏழ்மை நடுவும் நன்மையரே!

மகளே! உன்னை வருத்தியுன்
வாழ்வை அழிக்கத் துணிந்தேனே!
துகளே எனிலும் என்சொத்துச்
சுவறா துனக்குத் தடுத்தேனே!
பகைவன் என்னைப் பின்பும்நீ
பாசங் கொண்டே அழைத்தாயே!
மிகுநல் லீர நெஞ்சுடையாய்!
வேண்டாம்! கொடியன் சுமையாகேன்!

மேரி : பெற்று வளர்த்த பெற்றோரைப்
பிணிகொள் முதுமைக் காலத்தில்
சற்றுந் துன்பந் தாக்காமல்
தாங்கிப் பேணாப் புதல்வர்கள்
முற்றுங் கொடிய மிருகங்கள்!
முந்தி விட்டாள் அம்மா ஆ!
குற்றங் குறையை மன்னித்துக்
கூட வருக வீட்டிற்கு!

சூசை : பணிவார் மகளே!வருகின்றேன்
பாவி நானுன் வீடங்குன்
கணவர் என்ன சொல்வாரோ?
கண்டால் உனையும் ஏசாரோ?

மேரி : துணைவர் இறைவன் மறுசாயல்!
துன்பப் படுவோர்க் கிரங்குபவர்!
இணையில் பெருவாழ் வெனக்கீந்த
ஏந்தல்! மகிழ்ந்தே வரவேற்பார்.

உல்லா சத்தின் உப்பரிகை
உங்கள் வாழ்க்கை நிலையாக,
இல்லாச் சிறியர் நாமங்கேன்
இடராய் வரவேண் டும்என்று
பல்லாண் டுங்கள் பாசத்தைப்
பரிவை மறந்து வாழ்ந்திட்டோம்!
எல்லாந் தலைகீ ழாகிநும்
இனிய வாழ்வைச் சாய்த்தனவோ?

என்னைத் தொடர்ந்தும் படிப்பித்தார்
இந்த நிலைக்கு வைத்திட்டார்
பொன்னைப் பொருளைச் சாதியினைப்
புகழை மதிக்கா என்கணவர்!
என்னை அம்மா! என்றழைக்க
இன்று மூன்று மக்க ளுளர்!
என்னன் னைதான் என்நெஞ்சில்
எரியை மூட்டிச் சென்றாள்!ஆ!

முன்பின் நடந்த நிகழ்ச்சிகளை
முற்றாய் மறந்து நானுங்கள்
அன்பின் மகள்என் பதைமட்டும்
அகத்தில் கொள்ளுங் கள்அப்பா!

துன்பம் இன்றி நானுங்கள்
தொண்டுஞ் செய்தே அதனாடே
இன்பம் அம்மா வின்ஆவி
எய்தும் வண்ணம் உழைத்திடுவேன்!

சூசை : (மனதுள்)
இளகுங் கருணை மனவீடு
இறைவன் வாழும் பெருவீடு!
களவு, சூழ்ச்சி, பொய்கரவுக்
கத்தி பொல்லில் லாவீடு!
தளரா வண்ணம் பகைவரையும்
தாங்கும் எண்ணம் உறைவீடு!
வளரும் வாழ்வோர் அவ்வீட்டை
வணங்கி ஏற்று நடப்பவரே!

மேரி : இருங்கள் அப்பா நோயாளர்
ஏரா எம்பேர்! பார்த்திட்டுத்
திரும்ப மணியொன் றில்வருவேன்!
தேநீர் கடையில் எடுப்பித்தேன்!

(மேரி வெளியில் சென்று சில நிமிடங்களில் திரும்பு கிறாள்)

அருந்திச் சிறிதே ஆறிடுக!
அவரும் உந்து கொண்டிங்கு
வருவார்! வீடு சென்றிடலாம்!
மன்னித் திடுக! வருகின்றேன்!

(மேரி எழுந்து ஆலோசனை அறைக்குள் நுழைகிறாள். சூசை தமக் கெதிரிலிருந்த சிறு மேசையில் கிடந்த பளிங்கன் எழுதிய "உழைக்குங் கைகள்" என்ற கவிதைத் தொகுதியை எடுத்துப் புரட்டிப் பார்த்து இறுதியில் புற மட்டையை நோக்குகிறார்)

பிறவிக் கவிஞர் பளிங்கர்தம்
பெருமைக் குரிய பிறநூல்கள்:
"துறவி" "சொக்கும் எழில்கோடி"
"சுனையில் மலர்கள்" "தொழிலாளி"
"பிறையின் முறிகள்", "நீர்க்கோலம்"
"பேசும் விழிகள்", "ஒளித்தூவல்"

"துறையில் மறிகள்", "தாலேலோ",
"சோம்பற் சோறு", "வான்பூக்கள்",

"தெருவில் நாய்கள்", "விழுதூஞ்சல்",
"திண்ணைக் கழகம்", "கடலோடி"
"துருவ மீன்கள்", "கலைந்த துகில்",
"சுவைக்கச் சுவைக்க", "செவ்வானம்",
"குருவி பாடுஞ் சிற்றருவி",
"குளத்தங் கரையில் பாறையிலே",
"அரிவி வெட்டிப் பாடுகிறாள்!"
"அன்று கேட்ட தெம்மாங்கு!"

அடடா மேரி உண்மையிலே
அறிவும் அன்பும் பெறுதற்குந்
தடையும் உண்டோ? இப்புலவன்
சந்தன மரம்! என் மகளருகே
அடர்ந்து மணங்கொள் வேப்பமரம்!
அன்பின் மணமே இவர்வாழ்வில்!

(மேரி ஆலோசனை அறையிலிருந்து சூசை அமர்ந்திருக்கும் அறைக்குள் நுழைகிறாள்)

மேரி : முடிந்த தப்பா! இவர்வரவே
மூன்று பேரும் சென்றிடலாம்!

(மேரி களைப்புடன் நாற்காலியில், நிம்மதிப் பெரு மூச்சுடன் குந்துகிறாள். அவளது வருந்தி நலியும்

நெஞ்சிற்கு இனிய தேறுதல் கூறும் முறையில், அவளது கடந்த கால வாழ்வின் நிகழ்ச்சி நிழல்கள் அவள் மூளைச்சுவரில் கோலம் போடுகின்றன)

"திரை"

---

## காட்சி : 2

இடம் : பளிங்கன் வீட்டுப் பள்ளியறை

நேரம் : காலை 8 மணி

உறுப்பினர் : பளிங்கன், அஞ்சலாளன்.

(பள்ளி அறைக்குள் பலகணி வழியாகக் காலையிளம் மஞ்சள் வெய்யில் நீண்டு விழுகிறது. விட்டு விட்டுக் கரையுங் காக்கைக் குரல், குருவிகளின்கீச்சொலிகள், கூரைக் கோழிச் சேவல்களின் கம்பீரக் கூவல்கள் என்பன அறைக்குள் வந்து போகின்றன. தென்றல் மணஞ் சுமந்து அசைந்தசைந்து வந்தபடி இருக்கின்றது. பளிங்கனின் குழம்பித் தவிக்கும் மனதில் இவற்றின் வரவு கவனிக்கப்படவில்லை. அவன் மட்டும் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருக்கிறான். சிந்தனை தேங்கிக் காதல் மயக்கத்தாற் சோர்வு குழையப் பார்க்கும் கூர்மையான கண்கள்! கலங்கித் தடுமாறும் உள்ளம். இவற்றுடன், தனிமை நிறக, பளிங்கன் உலாவுகிறான்.)

பளிங்கன் : (தன்னுள் கூறுதல்)

கன்னம் பொங்கும் ரோமத்தாள்!
கவிதை தந்த கட்டழகி!

என்நெஞ் சத்தைத் தன்வாழ்வாய்
　　எடுத்து நிற்கும் பொற்சிலையாள்!
பின்னல் இரண்டில் என்சிந்தை
　　பிளந்து வைத்துப் பின்னுபவள்!
தென்னங் காய்கள் இரண்டுடனே
　　திகழுஞ் சின்னத் தென்னைமரம்!

அரைப்பா வாடை, சட்டையுடன்
　　ஆடும் பாம்பாய் வந்திடுவாள்!
கரைப்பா ரற்றுக் கிடந்தமனக்
　　கல்லுங் கரைய நின்றிடுவாள்!
இரைக்காய் என்றன் தோள்களிலே
　　ஏறி மேயுங் கண்ணுடையாள்!
நரைக்குந் தலையுங் கறுத்திடலாம்
　　நங்கை அவளை எண்ணிட்டால்!

ஒருகால் வந்தாள் என்னருகில்
　　உள்ளத் துறுதி வாங்கிட்டாள்!
ஒருகால் வந்தாள்! நோக்காலே
　　உள்ளந் திருடிச் சென்றிட்டாள்!
ஒருகால் ஏங்கிப் பார்த்தாள்என்
　　உயிரைப் பிடுங்கிச் சென்றிட்டாள்!
ஒருகால் இன்னும் வந்தெனையும்
　　ஊர்க்குங் கைதொட் டிழுப்பாளோ?

ஊரும் அறியேன்! பொன்வாயில்
　　உதிருங் குரலுங் கேட்டறியேன்!
யாரும் அவளின் உறவினரை
　　அறியேன்! இன்பப் பெயரறியேன்!
ஈரம் மிக்க என்னுள்ளம்
　　எண்ணி அவளைக் கரைகிறது!
யாரும் அறிந்தோ ரைக்கேட்டால்
　　அவர்கள் என்ன நினைவாரோ?

வாத்தி வேலை பள்ளியிலே
வழமை யான லயிப்பில்லை!
பார்த்த வர்கள் ஏனப்பா
பாதி யானாய் என்றார்கள்!
சேர்த்து வைத்த என்கவிதைத்
திரட்டில் ஒன்றை எங்கோகண்
பார்த்து வைக்கத் தவறிட்டேன்!
பதைப்பும் அதுவே றொருபக்கம்!

மருத்துவப் பள்ளி யோ,நோய்கள்
மாற்றப் பயிலுங் கல்லூரி!
வருத்தும் நோய்கள் வரப்பண்ணி
வாட்டல் அதற்கு நோக்கில்லை!
ஒருத்தி அங்கே நின்றவளோ!
உள்ளம் பிழியும் நோய்தந்தாள்!
வருத்தம் என்னை வாட்டுகிது
மாற்ற அவளோ எண்ணாளாம்.

பாட்டில் நான்முன் பாடாகப்
படுத்தி வந்தேன் காதலினை!
ஆட்டி என்னை அலைக்கிறதே
ஆனால் இன்றக் காதல்?மேல்
நாட்ட வர்போல் உடுப்போரை
நகுவேன்! இன்றோ அச்சட்டை
போட்டு நிற்கும் ஓரழகி
புகுந்தே விட்டாள் என்நெஞ்சில்!

புத்தம் புதிய கற்பனைகள்
பூக்கும் பொழுது கவிஞர்கள்
சித்தம் எல்லாந் தித்திக்கும்!
தெரியுங் கவிதை செய்வோர்க்கே!
புத்தம் புதிதுட் புதிதாக

பூக்கும் மயிலின் நினைவென்றால்
சித்தம் மேனி உயிரெல்லாம்
தித்தித் தமுதைப் பொழிகிறதே!

புத்தர் எலும்பு பற்களையே
புனிதப் பொருளாய்ப் போற்றுகிறார்!
முத்தின் உருக்கு முழுவடிவ
முருகி மீதில் யான்கொள்ளும்
பித்தைப் போலப் புத்தர் மேல்
பெரிய பற்றுக் கொண்டனரேல்
அத்தனை மேனிப் பகுதிகளும்
அன்றே காத்து வைக்காரோ?

பருவத் திமிரின் நிமிர்வெல்லாம்
பங்கிட் டேந்தி விம்மியெழும்
உருவக் குமரி என்னுள்ளே
உறங்கும் இளமை உணர்வெல்லாம்
பெருகிப் பொங்கி எழும்வண்ணம்
பேசா தறைக்குள் வருகின்றாள்.
அருகில் என்றன் உடலோடே
அணைந்து குந்திக் கொள்கின்றாள்.

காந்தக் கையால் என்தலையைக்
கனிவாய்க் கோதி விடுகின்றாள்!
மாந்தத் துள்ளும் மனதிற்கு
மருந்து செய்ய எழுகின்றேன்!
கூர்ந்து பார்த்தும் ஓரிடமும்
கொடியை அங்கே காணாமல்
சோர்ந்த நெஞ்சந் தீயாகத்
தொப்பென் றோய்ந்து வீழ்கின்றேன்!

மீண்டும் கனவில் வருகின்றாள்!
விம்மிக் கண்ணீர் வடிக்கின்றாள்!
நீண்ட கூந்தல் குலைவுற்று
நின்று தவழுந் தோளெல்லாம்!
தீண்டித் தழுவி என்னுயிரைத்
தேற்றிச் சிரிக்கக் கண்டிடுதல்
வேண்டும் என்றே எழுகின்றேன்!
வெறுமைக் காற்றைத் தழுவுகிறேன்!

பொங்கிப் பொருமும் நெஞ்சோடு
பொழியும் வியர்வை உடலோடு
அங்கு சாய்ந்து புரள்கின்றேன்!
ஆறி நெஞ்சம் விழிமூட
எங்கோ நின்று வருகின்றாள்!
எரியும் நெஞ்சைத் தொடுகின்றாள்!
திங்கள் தாங்கும் கனிவாயின்
செம்மை தேயச் செய்கின்றாள்.

தேன்கூட் டீக்கள் கிண்ணென்று
சிதறிப் பாய்ந்து பரவல்போல்
ஊன்கூட் டுள்ளத் துணர்ச்சிகளும்
ஒய்யென் றெழுந்துள் ளுந்துவதால்
நான்வீச் சாக எழும்புகிறேன்!
நான்நா னாக நில்லாமல்
வான்வீட் டமிழ்தை அறையெல்லாம்
வாய்விட் டழைத்துத் தேடுகிறேன்.

உறக்கம் இல்லை! உணவில்லை!!
ஒய்வும் இல்லை! செயலில்லை!!
மறத்தல் இல்லை அவள்வடிவை!
மனதுள் எண்ணிக் கலங்குகிறேன்!

இறக்கும் பொழுதும் என்னன்னை
“இனியுன் பெற்றோர் முருகன்தான்
குறைக்குள் காப்பான்!” என்றாளே!
கூர்வே லப்பன் அருளிதுவோ?

முருகா காண்பாய் என்துயரை!
முன்பின் தெரியா வேதனையே!
உருகி உருகி ஒரு மயிலை
உள்ளம் ஏந்தக் கரைகின்றேன்!
தருக அவளை! இல்லையெனில்
தருக சாவை இந்நொடியே!
அருள்க நன்மை சிறியேற்கும்!
அன்னை தந்தை போன்றவனே!

ஓகொ என்ன மணியொலியும்
ஒன்று கதவில்? யாரேனும்
நோகும் என்னைப் பார்த்துப்போய்
நொடித்தற் காக வந்தனரோ?
(வாசலைத் திரும்பி நோக்கி விட்டு விரைந்தோடி)
ஆக! கடிதக் காரன்தான்!
அவளின் கடிதம் வாராதோ?
யோகர் தாரும் பார்ப்போம்!
(கடிதத்தை வாங்கிப் பார்த்து) ஓ!
உருண்டை உருண்டை எழுத்துக்கள்!

“மேரி” என்றே உறைமுலை
மீதில் எழுதி யுள்ளாள்! ஆம்!
ஊரும் பேரா தனை! அவளின்
உள்ளம் விட்ட தூதேதான்!
ஈரம் மிக்க நெஞ்சுடைய
என்றன் உயிரின் கடிதந்தான்!

யாரும் தரகு செய்யாமல்
அப்பன் முருகன் அருளிட்டான்!

(கடித உறையைக் கணப்பொழுதில் கிழித்து வாய் விட்டுப் படிக்கிறான்)

அன்புக் கவிஞ! வணக்கங்கள்!!
அருமைப் புலவ! வணக்கங்கள்!!
இன்பப் பாட்டால் உலகெங்கும்
இனிமை பெய்வோய்! வணக்கங்கள்!!
துன்பம் போர்த்த இன்பத்தைத்
தூவி இளமை நெஞ்சத்தில்
தன்பாட் டில்ஊர் சென்றிட்ட
சாமீ! பணிவு வணக்கங்கள்!

(கடிதத்திலிருந்து பார்வையை நிமிர்த்திக் கொண்டு பேசுகிறான்)

அடடா!சாமீ என்றன்றோ
அழகாய்க் கிண்டல் செய்கின்றாள்!
மடையன்! உணர்ச்சி அற்றவனாய்
வந்தேன் பேசா தவளோடு!
தடைகள்! தடைகள் உலகத்தில்!
தடைகள் என்றால் தானென்ன?
உடையேன் ஆகில் மெய்யன்பும்
ஒருசொல் பேசி யிருக்கேனோ?

(மீண்டுங் கடிதத்தில் பார்வையைப் பதித்துத் தொடர்ந்து படிக்கிறான்)

உங்கள் கவிதை எல்லாம் என்
உயிரைக் கழுவும் ஒளிவெள்ளம்!
திங்கள் பூக்கள் வெள்ளியினைத்
தேடிப் போகத் தேவையிலை!
உங்கள் பாட்டுப் படிப்போரை

ஓடி வந்து கொஞ்சுமவை!
சிங்கம் போலும் உங்களை நான்
சேரப் பாட்டே உதவிடுமோ?
(பார்வையை உயர்த்தி மகிழ்வுடன் வெறித்து நோக்கி)

உதவும் உதவும் கட்டாயம்!
ஓடி வருவேன் உவ்விடமே!
கதவுந் திறந்து கைகாட்டிக்
காதல் மங்கை அழைத்திட்டால்
சிதையில் கிடக்கும் பிணம்கூடச்
சிரித்துத் துள்ளி எழும்பாதோ?
மதுவில் விளைந்த பூவிதழின்
வாயை என்ன செய்வேன்பார்!
(கடிதத்தை மீண்டும் படிக்கிறான்)

“அத்தான்” அகிலம் போற்றுமொரு
அழியாக் கவிதை வேந்தைவெறும்
பித்தால் அத்தான் என்றேழை
பிழையாய் அழைத்தல் பொறுத்திடுக!
மத்தாய் உங்கள் நினைவென்றன்
மனசுத் தயிரைக் கடைந்ததனால்
அத்தான்! உயிரே! வருக! - எனும்
அன்பு மொழிகள் வெண்ணெய்வரும்!

பாட்டுத் திரட்டுத் தனையெங்கள்
பள்ளியில் விட்டுச் சென்றீர்கள்!
கேட்டு வாங்கி உங்களிடம்
கிட்டச் செய்வேன் எனச்சொல்லிப்
பாட்டை யெல்லாம் பக்குவமாய்ப்
பாட மாக்கி முடித்திட்டேன்!
மாட்டேன் அனுப்ப! தொலைந்துவிடும்!
வந்தே பெற்றுச் சென்றிடுக!
(வியப்பில் ஆழ்ந்தவனாய்ப் பேசுகிறான்)

அம்மா டீ! - அங் காவிட்டேன்?
அவளா காத்தாள் மிகநல்லாள்!
சும்மா தானே அறையெங்கும்
துருவித் துருவித் தேடிட்டேன்!
நம்மா லல்ல நடந்ததிது!
நல்லை முருகன் விளையாட்டே!
செம்மாங்கனியை இந்த அணில்
சேர நிகழ்ந்த திருக்கூத்தே!

(தொடர்ந்து கடிதத்தின் ஓட்டத்தில் கண்களைப் புதைக் கின்றான்)

மல்லைக் கல்லின் குகையெல்லாம்
மயக்கும் சிற்பம் செய்திட்டார்!
முல்லைக் கொடியைக் கொண்டுமலர்
மூடும் பந்தர் மணம் தந்தார்!
சொல்லைக் கொண்டு சுவையெட்டும்
சொட்டும் பாக்கள் சொரிந்தேஎன்
இல்லை என்னும் உணர்ச்சிகளை
எழுப்பிக் கனவுந் தந்தீர்கள்!

பளிங் : ஐயோ ஐயோ சேர்வேனோ
அவளின் வீடே இப்பொழுதே?
கையே சிறகாய் மாறாயோ?
காற்றே தூக்கிச் செல்லாயோ?
பொய்யோ எல்லாம்? எங்கே
(தன் கையைக் கிள்ளிப் பார்த்து) சைக்!
பொன்போல் உண்மை! முருகாஎன்
செய்வேன்? ஆமாம் வாசிப்போம்!
தேனைப் பருகிக் கொள்வோமே!

(மீண்டும் கடித நீரோடையில் அன்பு வார்த்தை மீன்களைத் தேடிப் பார்வைத் தூண்டிலை வீசுகிறான்)

என்னில் ஏதுங் குறைகாணில்
ஏழை செய்த தவறென்று
மன்னித் திடுக! தவறாமல்
வருக வண்டி இன்றேறி!
என்னை நாளை இரவுக்குள்
இங்கே கொழும்பு வீதியிலே
முந்நூற் றேழாம் எண்வீட்டில்
முயன்று சந்தித் தருள்செய்க!

வந்து சேரத் தவறிட்டால்
வாசல் தன்னில் என்நெஞ்சு
நொந்து நொந்து முடிவினிலே
நூறு துண்டாய்ச் சிதறிவிடும்!
கொந்திக் கொந்தி என்நெஞ்சைக்
கொடுமை செய்த கண்கொண்டு
பிந்தி வந்தால் நானல்லப்
பிணமே கிடக்கக் காண்பீர்கள்!

தூரப் புகைவண் டிப்பயணம்
துன்பம் தரலாம் உடலுக்கு!
வாருங் கள்பால் பழங்கொண்டு!
வண்டியில் வைத்துப் பசிக்கின்ற
நேரந் தவறா துண்ணுங்கள்!
நித்திரை செய்க தலையணையில்!
சேரும் வரைதான் இடரிங்கு
சேர்ந்தால் சேய்போல் பேணிடுவேன்!

(பளிங்கன் நெஞ்சங் குளிர்ந்து, உடல் சிலிர்த்து, முகம் மலர்ந்து பேசுகிறான்)

திராட்சைக் குலையே! நில்லங்கே!
தேடும் அணில்நான் வருகின்றேன்!
இராச்சி யம்நீ இருஅங்கே!
ஏற்கும் மன்னன் வருகின்றேன்!
அராக்க முத்தின் மணியே நில்!
அரவாய் அங்கே வருகின்றேன்!
குராப் புனைந்த வேலவனின்
கொடையே ஏந்த வருகின்றேன்!

(கடித ஓட்டத்தில் பளிங்கனின் பார்வை பழையபடி கலக்கிறது)

கனவில் வந்து வந்தென்றன்
கையைத் தொட்டாற் போதாது!
கனியக் கனியக் கண்ணாலே
கதைகள் சொன்னால் போதாது!
புனையும் பாவால் என்நெஞ்சைப்
பூரிப் பித்தாற் போதாது!
தனியக் குந்தி என்நெஞ்சின்
தாகஞ் சொல்ல வரவேண்டும்!

கனியும் பாலும் பெருமைபெறக்
கவிஞர் ஏறே! வரவேண்டும்!
பனியின் குளிரில் போர்வைபோல்
பாட்டின் மன்னா வரவேண்டும்!
முனியுங் காதல் உணர்விற்கு
முதன்மை மருந்தே வரவேண்டும்!
தனிமை என்னைக் கொல்கிறது!
தாங்கிக் காக்க வரவேண்டும்!

ஆயிரம் ஆயிரம் பேர்சொக்கி
“ஆகா” என்று கைதட்ட

வாயினைத் திறந்து தேன்பெய்யும்
வண்ணக் கவிதை சொல்பவரே,
நாயெனக் காகப் பொன்னுதிர
நான்கு சொற்கள் சொல்வாரோ!
தீயெழு நெஞ்சை ஆற்ற - ஒரே
திரைநீ ராறாய் வருவாரோ?

பூக்கள் தூவி நாளுமவர்
பொன்போல் அடிகள் தொழுதிடுவேன்!
யாக்கும் பாக்கள் எழுதிடவே
அமைந்த மையாய்க் கரைந்திடுவேன்!
காக்கும் அன்பின் அணைப்பினிலே
கட்டுண் டவரின் பணிசெய்வேன்!
தூக்கந் தருவேன் மடிமீதே!
சுணங்கா தோடி வருவாரோ?

(கடிதத்தை மளமளவென்று மடித்துச் சட்டைப் பைக்குள் வைக்கிறான்)

ஓடி ஓடி ஏற்பாட்டை
ஒழுங்கு செய்து புகைவண்டி
ஓட ஓடப் பாய்ந்தேறி
உன்னை வந்து சேர்ந்திடுவேன்!
பாடப் பாடச் சுவையூறும்
பாட்டின் பொருளே! இளமையிலே
மூட மூடத் தணியாது
மூளுங் காதல் கொடிதம்மா!

"திரை"

## காட்சி : 8

இடம் : கண்டிப் பேராதனை வீதியிலுள்ள ஒரு வீட்டின் இருஅறைகள்.

நேரம் : இரவு 8 மணி

உறுப்பினர் : மேரி, லில்லி

(மேரி பருவ எழில் பூத்துக் குலுங்கும் பூங்கொடி. இரவுச் சட்டைக் கோலத்தில் தன்னை அலங்கரித்தவளாய், தனது முன்னறை மெத்தையில் சிந்தனையில் புதைந்து மயங்கி அமர்ந்திருக்கிறாள். உள்ளறையிலிருந்து இந்த அறைக்குள் மெல்ல வந்து சேர்ந்த மேரியின் பள்ளித் தோழி லில்லி, தன் கையிலிருந்த நூற் பிரதியைப் பட்டென்று மேசையில் அடித்து வைத்துவிட்டு, மேரிக்கெதிரில் தன் மெத்தையில் தொப்பென்று குந்திக் கொண்டு குறும்பாக மேரியை வம்புக்கிழுத்துப் பேசுகிறாள்)

லில்லி : (அபயங் கொடுக்கும் பாவனையில் தன் கைகளைப் பிடித்துக் கொண்டு)
அஞ்சேல் மேரி அஞ்சாதே!
அடுத்த இரவுள் வந்திடுவார்!
கொஞ்சிக் குலவி உன்னோடு
கூத்தா டிடுவர்.......

மேரி : அளவுக்கு
மிஞ்சிப் போ றாய்!

லில்லி : மிகுதியினை
வெள்ளித் திரையில் கண்டிடுக!

மேரி : (யோசித்து)
பஞ்சு மெத்தை அவர்வந்தால்
படுக்க வேண்டும்! என்செய்வேன்?

லில்லி : அவருக்கு கேன்'டி தனிமெத்தை?
(மேரியின் மெத்தையைச் சுட்டிக் காட்டி)
அந்த மெத்தை போதாதோ?
கவலை அகலம் குறைவென்றோ?

மேரி : (குறுக்கிட்டு)
கள்ளி அடிப்பேன்! பொறுகொஞ்சம்!

(மேரி சிரிப்புடன் எழுந்தோடி லில்லியின் சொக்கைக் கிள்ளுகிறாள்)

லில்லி : அவரின் சொக்கே அல்லஅடி!
ஐயோஆ!ஊ! என்சொக்கை!

(மேரி சிரித்துக் கொண்டு தன் மெத்தைக்கு மீள்கிறாள்)

மேரி : கவனம்! கதைத்தால் வீண்கதைகள்
கன்னம் பிடுங்கிப் போடுவேன்! ஆம்!

லில்லி : (வேண்டுமென்று அறை முழுவதையும் வியப்போடு பார்த்து)
என்ன தவந்தான் இன்றெல்லாம்
எங்கள் அறையே செய்தாயோ?
சன்னல் துணிகள் அலங்காரம்!
தலையணை மெத்தைப் பட்டுறைகள்!
மின்னுங் குமிழின் விளக்கொளிகள்!
மிஞ்சும் புனுகு வாசங்கள்!
இன்னும் எத்தனை அழகைமறு
இரவினுள் கண்டு களிப்பாயோ?

(மேரி, லில்லி சொல்வதைக் கள்ளச் சிரிப்புடன் கூர்ந்து நோக்கிக் கொண்டிருக்கிறாள்)

லில்லி : அடியே உனக்கும் நாளையிரா
அடிக்கும் யோகம்! ஒருதோழி
தடல்புட லாயோர் வரவேற்பில்
தருவாள் இனிய விருந்தொன்று!

மேரி : படுபடு லில்லி விடியட்டும்
பறைவம்! தூக்கம் வருகிறது!

லில்லி : அடடா மறந்தேன் இரவொன்றுள்
அவட்குக் கனவு பலவன்றோ?

(மேரி சிரித்துக் கொண்டு எழுந்து மெத்தையில் தொப்பென்று குப்புறப் புரள்கிறாள்)

மேரி : போ'டி!

லில்லி : மெல்ல! மெத்தைக்கால்
பொறுக்கா துடைந்து போம்நாளை
தேடித் திரிய வேண்டிவரும்
தெருவில் கடையெல் லாங்கட்டில்!

மேரி : தா'டி லில்லி அவருடைய
தங்கக் கவிதைத் திரட்டொருகால்!

லில்லி : (பொய்க் கோபத்துடன்)
கோடி ரூபா தந்தாலும்
கொடுக்க மாட்டேன்! என்பாடு
விடிய விடிய விழிப்பாக
விடவே மாட்டேன்! நீயந்தக்
கொடிய பாட்டுக் களையெல்லாம்
குழறிக் கொட்டிக் கொண்டிருப்பாய்!

மேரி : (எழுந்து சென்று லில்லி கால்களை அன்பாகக் கட்டிக் கொண்டு)
அடியே செல்லக் கிளியன்றோ?
ஐந்து நிமிடம் பார்க்கத்தா.

லில்லி : விடடி! என்னை! ஒத்திகை

வேறு பார்க்கின் றாய்போலும்?

(மேரி லில்லியின் மென்மலர்க் கன்னத்தில் தனது பாலொளிப் பட்டுக் கன்னத்தைச் சேர்த்து இன்பமாகக் கண்களை மூடிக் கொள்கிறாள்)

மேரி : அன்புத் தோழி லில்லி!நீ

அறைக பகடி களைவிட்டே!

இன்பத் துணைவர் நாளையிரா

இங்கே வந்து சேர்வாரோ?

துன்பச் சூறை என்நெஞ்சைச்

சுடுமுன் காக்க வருவாரோ?

தன்பொன் வாயால் தமிழ்பாடித்

தாங்க என்னை வருவாரோ?

லில்லி : (மேரியைத் தவிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணங் கொண்டு)

போட்டாய் கடிதம்! பதிலேதும்

போட்டா ரோ?

மேரி : சே! வரவில்லை!

காட்டுத் தேசம் மலைநாடு!

கடிதம் வரநாள் மூன்றாகும்!

லில்லி : பாட்டுத் திரட்டுத் தொலைந்ததுவும்

பதைப்பைத் தருமென் பதற்கில்லை!

வீட்டில் அவற்றை எழுதிட்ட

வேறு திரட்டும் இருந்திடலாம்!

மேரி : (தவிப்புடன் லில்லியைத் தழுவியிருந்த
கைகளைச்சோரவிட்டு)
செய்தித் தாள்கள், சஞ்சிகைகள்
சிறப்பாய்ப் பதித்த கவிதைகளைக்
கொய்து சேர்த்த தாகையினால்
கொப்பி இதனைப் பெறவருவார்!

லில்லி : (விட்டுக் கொடுக்காமல்)
மெய்தான்! ஆனால் பலசுவைஞர்
வெட்டி இவரின் பாக்களெல்லாம்
பெய்த ஒட்டுத் திரட்டுகளைப்
பெறக் கூடியதாய் இருந்திட்டால்?

(லில்லியின் படுக்கையில் முகங்குப்புற விழுந்து அழுகிறாள் மேரி)

மேரி : என்ன லில்லி அப்படியேல்
இங்கே வரவே மாட்டாரோ?

லில்லி : (சிரிப்பை அடக்கிக் கொண்டு)
உன்னை விரும்பில் வரக்கூடும்!
உண்மை தானா விரும்புவது?

மேரி : (கண்களில் நீர்வழிய, உணர்ச்சிப் பெருக்குடன் எழுந்தமர்ந்து)
என்னை விரும்பல் பொய்யென்றால்
என்றன் நெஞ்சே வெடித்துவிடும்!

லில்லி : (வக்கீல் வினவும் தோரணையில்)
என்ன என்ன நடந்ததனால்
இவரின் காதல் தனையுணர்ந்தாய்?

(சிந்திக்கத் தொடங்கிய மேரி எதையோ நினைவு கூர்கிறாள். வாடிய முகத்தில் மகிழ்ச்சிக் குறிகள் படர்கின்றன. முகம் இப்பொழுது இன்ப உணர்வைக் கொப்பளிக்கிறது)

மேரி : முதனாள் கவிதை அரங்கத்தில்
முத்துக் கவிதை சொல்கையிலே
எதனால் ஒவ்வோர் வரியினையும்
என்னைப் பார்த்தே சொல்லிட்டார்?
எதனால் சபையோர் கைதட்ட
என்னைப் பார்த்தே மகிழ்ந்திட்டார்?
எதனால் அரங்கில் இருக்கையிலும்
என்னைக் கண்ணால் அருந்திட்டார்?

மேரி : (காதல் உணர்வு மயமாகிக் கனவில் நடப் பவள் போல் எழுந்து நடந்து கொண்டே பேசுகிறாள்)
எனக்குள் உயிர்தான் மேடையிலே
இருந்திட் டதுவோ, எனக்கென்று
நினைத்துக் கர்த்தர் படைத்தவனே
நின்று கவிதை சொன்னானோ?
அனைத்தும் உலகில் சேர்ந்தாலும்
அவனின் முன்னால் தூசெல்லாம்!
எனைத்தான் அவனே வெறுத்தாலும்
என்றும் அவனின் அடிமைநான்!

ஐயோ லில்லி மறுநாளும்
அரங்கு தொடங்க முன்யானும்
செய்வ தொன்றுந் தெரியாமல்
திரிந்தேன் அவரைச் சுற்றி! அவர்
மையல் குலவுங் கண்ணால்நான்
மயங்கப் பார்த்த பார்வையடி!

லில்லி : ( தனக்கு முன்னால் நடந்து கொண்டிருந்த மேரியின் முதுகைக் குறும்பாகத் தடவி விட்டு)

ஐயோ பாவம் சிலநாளில்
அந்த மயக்கம் தீர்த்திடுவார்!

மேரி : வாயைத் திறந்தொரு சொல்லேனும்
மடைச்சி! பேசப் பயந்தேனே!
போயொரு தடவை அவர்பாட்டைப்
புகழப் பார்த்தேன்! அங்குள்ள
பேயை வெல்லும் பெண்களினால்
பெரிதும் அஞ்சி விட்டேனே!
சே! எப் பொழுதோ அவர்நெஞ்சில்
தித்தித் திடநான் பேசுவது?

மேரி : (லில்லியின் நாடியைக் கெஞ்சுங் கண்களுடன் தடவிக் கொண்டே)

லில்லி! தேவத் தூதனையாய்!
இனியுங் கேலி பண்ணாதே!
சொல்க எனது மனமாற!
துயரந் தீர்க்க வருவாரோ?

லில்லி : கல்லும் புகழும் கவிவல்லான்
காலை வண்டி ஏறியிரா
எல்லாம் இந்த இடத்திற்கு
வந்தே விடுவான்! இதுவுண்மை!

மேரி : (லில்லிக்கு முன்னால் தரையில் குந்தி அவள் மடியில் தன் தலையைச் சுமத்தி)

உன்வாய் பொன்வாய் ஆகட்டும்!
உனக்குக் கர்த்தர் அருளட்டும்!
என்போல் ஏழைக் கேற்றவளாய்
ஏசு தந்த துணையடி நீ!

லில்லி : உன்மேல் அவர்க்கும் அன்புமிக
உண்டு! முன்பே நானறிவேன்!
மின்போல் வெட்டும் அவர்பார்வை
வீழ்ந்த துன்மேல் கோடிதரம்!

மேரி : (வியப்புடன் எழுந்து)
கள்ளி! கள்ளி! இதையெல்லாம்
கண்டும் ஏன்'டி என்னைக்கொன்றாய்?

(லில்லியின் மூக்கில் பிடித்து அவள் சடை குலுங்கக் குலுக்குகிறாள்)

லில்லி : பள்ளி தன்னில் சிலபெண்கள்
பறையக் கேட்டேன் இக்கதையை?
மேரி : உள்ள படியா? சொல் லில்லி!
லில்லி : உண்மை! நீபோய் யாவரையும்
தள்ளி விழுத்திக் கொப்பியினைத்
தந்தால் அதனைப் பக்குவமாய்ப்

பளிங்கர் கையில் சேர்ப்பேனெனப்
பறித்தால் சும்மா விடுவாரோ?
மேரி : களங்கம் ஒன்றும் அதிலில்லை!
லில்லி : கதையுன் பெற்றோர்க் கெட்டிட்டால்?
மேரி : இழந்தேன் ஆவேன் காதலினை!
என்ன லில்லி? மெய்தானா?
லில்லி : குழந்தைப் பெண்ணே! நீ தானா
கொண்டாய் காதல் துணிவாக?

கேலி யாகச் சொல்லுமுனம்
கேட்ட வுடனே அதிர்கின்றாய்!
கோல நிலவு நாளையுன்
குடிசைக் குள்ளே நடமாடும்!
மூலை முடுக்கெங் கும்நெஞ்சில்

முட்டி மோதும் பேரின்பம்!
சேலைப் போலுங் கண்களினில்
செம்மை ஏறும்! அடடா பார்
சிரிப்பு வந்து விட்டதனை!

மேரி : சீச்சி வெட்கம் இல்லாமல்....?
விருப்பம் மீறில் தமிழ்ப்பண்பை
மீறி மிதித்து நடப்போமோ?

லில்லி : தரட்டோ கவிதைக் கொப்பியினை?

மேரி : தாடி! ஒருக்கால் பார்த்திடுவோம்!

(லில்லி தன்மெத்தையில் தலையணையின் கீழ்க்கிடந்த திரட்டை எடுத்து மேரியின் கையில் கொடுத்துப் படுக்கையில் சாய்கிறாள்)

லில்லி : விரித்து மெல்லப் படி!கண்கள்
விழைந்து தூங்க முனைகி'தடி!

(மேரி அந்தப் பாடல் திரட்டைப் பக்கம் பக்கமாகப் பிரித்துப் பார்ப்பதும், இடையிடையே "ஆகா" என்பதும், அடுத்தபக்கத்தைப் புரட்டிப் பார்ப்பதும் "ஐயையோ" என்பதுமாக இருக்கிறாள். ஒரு தாளைப் புரட்டியதும் வரும் முதல் பக்கத்தில் பளிங்கனின் பளிங்குபோன்ற வதனம்காட்டும் நிழற்படமும் அவனது பிரபலமான கவிதையொன்றும் வெளியிடப்பட்ட பத்திரிகை நறுக்கு ஒட்டப்பட்டிருக்கிறது. மேரி அந்தப் படத்தை அத்துடன் நூறாவது தடவையாகப் பார்க்கிறாள். வைத்த கண்வாங்காமல் பார்க்கிறாள். பருகுகிறாள். தன்னை மறக்கிறாள்.

வீணை எனது நரம்பொன்றை
மீட்டி வாழ்வில் முதல்முதலாய்
பாணம் போலும் பார்வையினால்
பாடாய்ப் படுத்தித் தன்னன்பால்

நாணம் நீக்கி ஏக்கத்தால்
நலிய வைத்த அவர்வாழ்வில்
பாணன் ஆவேன்! அவரோடு
பாட்டுக் குலவ ஊக்கிடுவேன்!

தமிழின் வலிமை தானென்னே!
ததும்புஞ் சுவைகள் தாமென்னே!
கமழும் தெய்வ மணமென்னே!
கதிக்கும் உணர்ச்சிச் சுழியென்னே!
தமிழின் தூய்மை ஒளியென்னே!
தாங்கும் பழமைச் சிறப்பென்னே!
அமிழ்தாய் எல்லாம் உணர்விக்கும்
அவரின் திறமை தானென்னே!

ஏர்கொள் நார்கொள் என்றென்றே
எதுகை மோனை வரவேண்டி
ஓர்சொல் கூடப் புரியாமல்
ஒட்டி வைத்து யாக்கின்ற
பேர்கொள் போலிப் பாட்டுப்போல்
பேய்ப்பாட் டாக இருக்குமெனப்
பாரென் பளிங்கர் பாட்டினையும்
பாவி முதலில் நினைத்தேனே!

பளிங்கர் இன்பப் பாட்டெல்லாம்
படிப்பே அறியாப் பாமரரும்
விளங்கும் அமுதப் படையல்கள்!
வெறியின் சுழிகள்! உயிர்ப்பண்பில்
விளைந்த செழுமைச் செல்வங்கள்!
மேலோர் போற்றும் அம்மேலோன்
குழைந்தென் னோடு கொண்டாடில்
குதிக்கா தாமோ என்னுள்ளம்?

சொல்ல இனிக்கும் பெயரேதான்!
சொக்கும் பளிங்கு வடிவந்தான்!
வெல்ல மிதந்து கடலலையை
விம்மி நிமிர்ந்த மார்பேதோன்!
மெல்ல அரும்பி அழகாக
மினுங்கி நிற்கும் மீசைதான்!
கொல்ல நினைந்து கொஞ்சாமல்
குழையும் குவியும் வாயேதான்!

தேனில் செய்த இனிய குரல்!
சிரிப்பில் செய்த அழகு முகம்!
வானில் செய்த தெய்வமனம்!
மலரில் செய்த மெல்லுணர்வு!
வேனில் செய்த செழுமையுரு!
வெற்றில் செய்த தோள்களிணை!
யானுந் தமிழும் செய்ததவம்
யாத்த செல்வம் அக்கவிஞர்!

அந்த இனிய குரலைநான்
அருகில் இருந்து கேட்பேனோ?
சொந்த முடனே அம்முகமே
தொட்டு, மகிழ வைக்கேனோ?
குந்த அவரின் மனக்கோயில்
கொஞ்ச இடமும் தருவாரோ?
நொந்துஞ் சலியா தவர்தொண்டில்
நூறு வயதும் வாழேனோ?

மேரி : பாதி மேனி பஞ்சணையில்!
பாதி மேனி அவர்மடியில்!
பாதி நெஞ்சங் கனவுலகில்!
பாதி நெஞ்சம் நனவுலகில்!

பாதி நேரம் பேச்சினிலே!
பாதி நேரம் மூச்சினிலே!
பாதி நேரம் நினைவினிலே!
பாதி நேரம் மறப்பினிலே!

இப்படி என்றன் வாழ்வினிலே
என்று வருமோ? ஐயையோ
எப்படி எல்லாம் எண்ணுகிறேன்
எங்கே போயிற் றென்பெண்மை?
துப்பிடு மாறு சான்றோர்கள்
தூய்மை கெட்டு நினைந்தேனோ?
எப்படி யிருந்தேன் என்னானேன்?
என்றன் மானம் தோற்றதுவோ?

(அறிவு மயங்கிய நிலையில் படுத்திருக்கும் அவள் கடைக்கண்களில் கண்ணீர் வழிந்தோடுகிறது)

"திரை"

---

## காட்சி : 4

இடம் : மேரி, லில்லி பள்ளியறை
நேரம் : இரவு 8 மணி
உறுப்பினர் : மேரி, லில்லி, பளிங்கன்.

(அறையின் சுவரில் ஏசுநாதர் படம் மாட்டப்பட்டிருக்கிறது. அதில் எரிந்துகொண்டிருக்கும் ஊதுபத்தி புகையைச் சுருள்சுருளாக உமிழ்ந்து கொண்டிருக்கிறது. புகையின் இனிய நறுமணத்தின் ஆட்சியில் அறையெங்கும் தூய உயர்ந்த இன்பம் தரும் சூழ்நிலை நிலவுகிறது. பளிச்சிடும் சுவர்களில் பூச்செடிகள் ஒளிர்கின்றன. மணப்பந்தல் போன்ற குதூகல அழகு, ஒழுங்காக

வைக்கப்பட்டிருந்த கதிரைகளில் ஒன்றில் அமர்ந்து தெருவில் எழவேண்டிய ஏதோ ஓர் ஒலியை எதிர் பார்த்துக் கிடக்கிறாள் மேரி! லில்லி அவள் எதிரில் அமர்ந்து ஒரு நூலைப் புரட்டிக் கொண்டிருக்கிறாள். திடீரென்று தெருவில் உந்து வந்து நிற்கும் ஒலி! மேரி துள்ளிக்கொண்டு எழும்புகிறாள். லில்லி முந்திக் கொண்டு ஓடிப்போய், தாழிட்டிருந்த கதவின் குறுக்கே நிற்கிறாள்)

மேரி : உந்து வண்டி ஒலி! ஆகா!!
ஒதுங்கு! கதவைப் திறப்போம்!
லில்லி : (மறுப்பாக) சே!
மேரி : வந்தார்! இங்கே! கெஞ்சுகிறேன்!
வழியை விடடி!
லில்லி : விடமாட்டேன்!
(மேரி லில்லியின் காலில் விழுந்து கெஞ்ச முயல்கிறாள்)
அந்தோ காலில் வீழாதே!
மேரி : அப்படி யானால் வழியைவிடு!

(லில்லி விலகிக் கொள்ள நொடிப் பொழுதில் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்க்கிறாள். தோற்பையுங் கையுமாகப் பளிங்கன் குறும்பாக மேரியைப் பார்த்துச் சிரித்து நிற்கிறான். மேரியின் ஆவல் துள்ளிய கண்கள் இப்பொழுது நாணி நிலத்தை நோக்கி நிற்கின்றன.)

பளிங் : சந்தன முகமேன் அந்தி நிறம்
சார்ந்தது?
மேரி : (பைக்காகக் கையை நீட்டி) தருக! வாருங்கள்!

(பளிங்கனின் கைப்பை மேரியின் கைப் பையாகிறது. இருவரும் உள்ளே போகின்றார்கள்)

லில்லி : வடித்தாய் கண்ணீர்! வருவாரோ
மாட்டா ரோஎன் றேங்கிட்டாய்!
கிடைத்த துனது கோரிக்கை!
கேட்டுக் கேள்வி இனியில்லை!
தடுக்கும்...! பறந்து வீழாதே!

மேரி : (நாணிச் சிரித்துக் கொண்டு பளிங்கனைப் பார்த்து)
சாய்க நாற்கா லிதன்னில்!
(பளிங்கன் அமர மேரி லில்லியிடம்)
துடுக்குக் காரி நீ! லில்லி!
சும்மா இருக்க மாட்டாயோ?

லில்லி : சண்டை எடுக்கேல் என்னோடு!
தக்க சோடி அங்கு!
(லில்லி பளிங்கனைக் காட்டிச் சிரிக்கிறாள்)

மேரி : (சிரித்து) புகை
வண்டி தனிலா வந்தீர்கள்?

பளிங் : வந்தேன் எதிலோ எஃபடியோ?

லில்லி : கண்டா யாடி உன்மேலே
கவனம் எல்லாம்!

மேரி : போலில்லி!
கொண்டு வாடி கோப்பியினை!
கொஞ்சம் உதவி செய்வாயோ?

(லில்லி உள்ளறைக்குள் போக, மேரி பளிங்கனின் காலில் விழுந்து வணங்குகிறாள். பளிங்கன் கூச்சப் பட்டுத் திணறுகிறான்)

பளிங் : காலில் வீழ நானென்ன

கடவு ளா சே! எழுந்திடுக!

(மேரி பளிங்கனின் கால்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு எழுகிறாள். லில்லி கையில் தேநீர்க் கோப்பையுடன் உள்ளே வருகிறாள்)

லில்லி : காலில் விழுந்து பழகியவள்!

கவலை யின்றி..........

மேரி : (கோபித்து) பச்சைப்பொய்!

லில்லி : நீலி சற்று முன்கதவை

நீக்க நீ,நான் தடுக்கையிலே

காலில் வீழ்ந்து மன்றாடிக்

கதவைத் திறப்பித் தாயன்றோ?

(நாணிச் சிரித்த மேரி லில்லி கொடுத்த கோப்பிக் கிண்ணத்தை இரு கைகளாலும் பளிங்கனிடம் கொடுக்கிறாள்)

பளிங் : ஆகா! இதுவோர் கைலாயம்!

மேரி : ஆமாம் சிவனிங் குள்ளதனால்!

பயிங் : ஓகோ! சைவமும் தெரியும்?

மேரி : உங்கள் கவிதை ஊட்டியது!

(லில்லி உள்ளே சென்று வெள்ளித்தட்டில் உணவு வகைகளை எடுத்து வந்து பளிங்கன் முன்னாலிருந்த சிறு மேசையில் வைக்கிறாள்)

மேரி : வாகாய்ச் சாப்பிட் டருளுக!

பளிங் : (மேரிக்கு மட்டும் கேட்க) ஏன்

பசியும் வருமோ எனக்கினிமேல்?

(மேரி ஒரு பாகினை எடுத்துப் பளிங்கனிடம் நீட்டப் பளிங்கன் அதைத் தன்கையால் தடுத்து)

பளிங் : ஊகூம்!

மேரி : (மேரி, லில்லி நிற்பதைப் பார்த்து)

லில்லி பால் கொஞ்சம்

ஊற்றிக் கொண்டு வருவாயோ?

லில்லி : நல்ல காலம்! பால்தன்னை
நான்கு தடவை சுடவைத்துச்
செல்லப் பண்ணி நேரத்தை,
திரும்பி வாவென் றுன்வாயால்
சொல்லா திருந்தாய்!

மேரி : (சிரித்து) போகள்ளி!
துடுக்குக் கார வாயாடி

(லில்லி உள்ளே போகிறாள் சிரித்துக் கொண்டு! மேரி பளிங்கனுக்கு முன்னால் தன் மெத்தையில் அமர்ந்து)

லில்லி என்றன் உயிர்த்தோழி!

பளிங் : இல்லைப் பாணன் பணிசெய்வோள்!

மேரி : (அறியாதவள் போல்)
அப்படி யென்றால்.........?

பளிங் : பாணன்தான்
அன்றைத் தமிழர் அகவாழ்வில்

ஒப்பரி தான தமிழ்பாடி
உணர்ச்சி ஊட்டிக் காதலரை
இப்படி ஒன்றாய்த் தழுவிடவும்
இன்பம் பெறவும் வைத்திடுவான்!

மேரி : (பதற்றம் தணிந்து)
அப்படி யானால் அப்பாக்கள்
எங்கே இன்று?

பளிங் : அழிந்தனவாம்!

லில்லி : (உள்ளிருந்து)
அடியே மேரி தம்பதிகாள்!
ஆயத் தமுடன் இருங்களடி!
அடியாள் பாலைக் கொண்டுங்கே
அணுகப் போகின் றேன்!கதையை
இடையில் குழப்பில் மன்னிப்பீர்!

பளிங் : (மெல்ல) இல்லைக் குறை, வா!

மேரி : (மெல்லச் சிணுங்கிச் சிரித்து) நேற்றெனது
கடிதம் கிடைத்த தா?

பளிங் : (மேரியின் கடிதத்தை எடுத்துக் காட்டி)
இந்தக்
காவியம் நூறு தரங்கற்றேன்!

(லில்லி பாற் கோப்பையை மேரியிடம் கொடுத்துவிட்டுத் தனது படுக்கைக்குப் போய்த் தலையணையை உயர்த்தி எதையோ தேடுகிறாள்)

மேரி : லில்லி என்ன தேடுகிறாய்?
என்ன வம்பு செய்வாயோ?

லில்லி : (தாள் ஒன்றை எடுத்துப் பார்த்தபடியே)
இல்லை! இல்லை! என்தோழி
எழுதிய பாட்டுத் தேடுகிறேன்!

மேரி : நல்ல பிள்ளை காட்டாதே!
நகைப்பார்! (மேரி தடுக்கிறாள்)
சீச்சீ! விடுஎன்னை!

லில்லி : மெல்ல இதனைப் பாருங்கள்!
வெல்லக் கூடும் உங்களையும்!

(பளிங்கன் தாளை வாங்கி வாய்விட்டுப் படிக்கிறான். அவன் முகத்தில் வியப்பும், வெட்கமும் மாறி மாறி நிழலாடுகின்றன)

பளிங் : (படிக்கிறான்)
"குளித் தெடுத்த முத்துகளைக்
கோத்தெடுத்த அசல்மாலை அவரின் பாட்டு!
தெளித் தெடுத்த செந்தேனில்
திரைகலந்து விட்டதொரு வெள்ளப்போக்கு!

வழித் தெடுத்து முழுவதையும்
மாந்துதற்குத் துடிக்கின்றேன்! மடமை!சின்னப்
புளித்தடுக்கில் பூவுலகின்
பொன்னனைத்தும் அடங்கிடு மா? புரியாஏழை!

(பளிங்கன் முகத்தில் பொங்கிய மலர்ச்சியைக் கண்டு உள்ளமெல்லாம் புல்லரிக்க நிற்கிறாள் மேரி. வியப்போடும் மேரியை ஏற இறங்கப் பார்த்திருக்கிறான் பளிங்கன்)

லில்லி : பாட்டைஎழுதிப் பரிசுபெறப்
பதைக்கும் ஒருத்தி! மகிழ்வாகப்
பாட்டைப் படித்துப் பரிசுதரப்
பதைக்கும் ஒருவர்! தடையாக
மாட்டேன்! பள்ளிப் பாடத்தில்
வரைய வேண்டும் குறிப்பொன்று!

(லில்லி சிரிப்போடு கதவை மூடிக் கொண்டு உள்ளே போகிறாள்)

மேரி : கேட்டீர் களோஇக் கிண்டலினை?
கேலிக் கார வாயாடி!

பளிங் : மேரீ!

மேரி : அத்தான் இனியென்னை
மேரீ என்று விளியாமல்
மாரீ என்று செந்தமிழால்
மகிழ்வோ டழைக்க வேண்டுகிறேன்!

பளிங் : பாரேன் வந்த தமிழ்ப்பற்றை!

மேரி : பாரேன் தந்த தமிழ்ப்பற்றை

பளிங் : மாரீ!

மேரி : அத்தான்! இங்கேதான்
வந்த மர்ந்தால் கூடாதோ?

(பளிங்கன் எழுந்து மேரிக்கருகில் அவள் படுக்கையில் அமர்கிறான்)

பளிங் : மாரி சும்மா மாரியல!
மனதை அள்ளும் பாமாரி!
மாரி சும்மா மாரியல!
வாழ்வில் பெய்யும் தேன்மாரி!
மாரி சும்மா மாரியல!
மன்னன் வேண்டும் மும்மாரி!
மாரி சும்மா மாரியல!
வாங்கு வாள்முத் தம்மாரி!

(பளிங்கனின் புகழ்ச்சியில் உச்சி குளிர்வுற்ற மேரி உடலும் உள்ளமும் புல்லரித்து நாணிக் குழைந்து கூனிக் குறுகி இருக்கிறாள்)

பளிங் : (கையிலுள்ள பாட்டுத் தாளை நோக்கி)
என்ன இனிய பாட்டிதுவும்!
எனினும் இதற்குப் பரிசுதரேன்!
என்னைப் புகழ்ந்தும் எழுதியதால்
எனது பரிசில் செல்லாதே!

மேரி : என்ன பரிசில் தங்களிடம்
ஈதற் குண்டோ?

பளிங் : (தன்னுதடுகளைத் தொட்டு) இப்பரிசில்!

மேரி : என்ன உந்தப் பரிசென்றால்
எண்பது கோடி பாடேனோ?

அத்தான்! தங்கள் காட்டுவளம்
அமைந்த இனிய பாட்டொன்று
பித்தா யென்னை மயக்கியது!

பளிங் : பின்பு?

மேரி : மனதைக் கவர்ந்ததனால்
மெத்த எளிதில் மனதிலது
வீடு கட்டிக் கொண்டுளது!

பளிங் : கொத்து மரலரே! நீ கூறில்
கூடும் மேலும் சுவை! கூறு!

மேரி : "குஞ்சுமீன் கூட்டம் பாய,
கொழுத்தமீன் பின்னே பாய,
கொஞ்சுபூங் கொம்பர்க் கொக்குக்
குலுக்கியே எட்டிப் பாய,
மிஞ்சுதேன் ஆற்றில் பெய்த
வெறியுறு வெள்ளம் தன்னை
அஞ்சுமான் பிணவு மாந்தி
ஆட்டிடும் மயக்கங் கொண்டு,

வெள்ளமார் ஆற்றின் ஓர
வெண்மணற் பரப்பில் பாய்ந்து
துள்ளிடும்! துள்ளிக் கொப்பில்
தொங்கிடும் கொடிப்பூ வூஞ்சல்
கொள்ளவே வீழ்ந்து தூங்கக்
குரங்குகள் ஊஞ்சல் ஆட்ட
மெள்ளவே குயிலின் வண்டின்
மெல்லிசை தாலாட் டும்மே!"

என்றும் நெஞ்சில் நின்றமுதாய்
இனிக்கும் இந்தப் பாட்டிற்கே
அன்றை அரசன் ஆகில்நான்
ஆயிரம் யானை தருவேனே!
இன்றை மந்திரி என்னில் நான்
இருபதி னாயிரம் தருவேனே!

பளிங் : ஒன்றும் வேண்டாம் என்னுயிரே
ஒன்றே தந்தாய் அதுபோதும்!

(மேரி யோசித்துப் பளிங்கனின் அடுத்த பாட்டையும் கூறுகிறாள்)

மேரி : "கடிமலர் வாடை மிஞ்சும்
கழனிகள் எங்கும் எங்கும்
மடலவிழ் நெல்லின் பொத்தி
மணிப்பசுங் கதிர்கள் எட்டிப்
பிடிபடும் உயரந் தன்னில்
பின்னியே துன்னுங் காட்சி
அடபசுங் கிளிகள்காடாய்
அல்லவோ தோன்றும் இங்கே"!

நாட்டு வளத்தைச் சொல்லிடவே
நல்ல கவிதை வேறுண்டோ?
நீட்டுங் கதிரின் பொலிவாலே
நிலவுஞ் செல்வ நிறைவெல்லாம்
காட்டுங் கவிதை!

லில்லி : (உள்ளிருந்தபடி) தேன்மாரீ!
கட்டி வையுன் கதையெல்லாம்!

மேரி : கேட்டுக் கொண்டெங் கதையெல்லாம்!
கிண்டல் செய்தாள் பாருங்கள்!

(பளிங்கன் சிரிக்கிறான்)

"தேனைப் பூவோ தனதென்னும்!
திரியும் வண்டோ தனதென்னும்!
கானில் கரடி தனதென்னும்!
கள்ள நரியோ தனதென்னும்!
தானும் மனிதன் தனதென்பான்
தாங்கும் நோயோ தனதென்னும்!
தேனைப் போன்றே மனிதர்க்குள்
சிக்கிச் செல்வம் படும்பாடு!

என்ன பாட்டு?

லில்லி : (உள்ளிருந்து) தமிழ்ப் பாட்டு!

மேரி : ஏன்டி படிப்போ நடக்கிறது?

லில்லி : உன்னைப் போலில் லையெனிலும்
ஓரள வாவது படிக்கின்றேன்!

மேரி : (சிரித்து)
பொன்னைப் போலும் இப்பாட்டில்
பொருளைப் பற்றி முதல்நாளில்
சொன்னீர் கள்நம் பள்ளியிலே
சுருக்க மாக அழகாக!

"உண்டென்பர்! இல்லை என்பர்!
உவரைநான் பிணிப்பேன் என்பர்!
சண்டைகள் புரிவர் நூறு
சமயங்கள் கட்டிக் கொண்டு!
"கண்டனம்! கதைத்தோம்"! என்பர்!
கடவுளென் தொண்டன் என்பர்!
கொண்டவர் தெய்வப் பண்பு
கோடியில் ஒருவர் இல்லை.

இந்தப் பாட்டுத் தெளிவாக
இன்றை மனிதர் இறைநெறியை
அந்தப் படியே காட்டியது!
அங்கே இரண்டாம் நாளரங்கில்
வந்த சபையோர் வாயெல்லாம்
வாழ்த்திய திந்தப் பாட்டினையும்!

லில்லி : அந்தோ மாரீ! நேரமெனில்
அடுத்து விட்ட தொருமணியை!

பளிங் : தமிழ்மேல் இந்தப் பித்தை, இளந்
தலைமுறைக்கே ஊட்டிவிடில்
எமது சிறுவர் தமிழுடே

எல்லாங் கற்பர்! தமிழ் வளரும்!
அமையும் சகல துறைகட்கும்
அரும்நூல் கள்,புதுத் தமிழ்ச்சொற்கள்!

லில்லி : தமிழே உன்றன் வளர்ச்சிக்குத்
தடையாய் மேரி வந்தாளே!

மேரி : (சிரித்து)
வம்புக் காரி! அடக்குகிறேன்
வாய்க் கொழுப்பை ஒருகாலம்!
வெம்பி வெட்கப் படவைக்க
விரைவில் எனக்கும் வாய்ப்பு வரும்!

லில்லி : நம்பிக் கெடுவாய்! நடக்காது!

மேரி : நடக்கும் பொழுது கேட்கின்றேன்!
தும்பி ஒன்றால் லில்லிமலர்
சுற்றப் படுங்கால் கேட்கின்றேன்!

(சிரித்துக் கொண்டே சுவர்க் கொளுக்கியிலிருந்து மெய்ச் சூட்டுறையை எடுத்து வந்து இரு கைகளாலும் பளிங் கனிடம் நீட்டிக் கொண்டே)

மெய்ச்சூட் டுறைநான் போடுவது!
விறைக்குங் குளிரின் கண்டியிது!
பொய்ச்சாட் டெதுவுஞ் சொல்லாமல்
போட வேண்டும் இப்பொழுதே!

(பளிங்கன் சட்டையை வாங்கி அணிந்து கொண்டே குறும்பாகச் சிரிக்கிறான்)

பளிங் : மிச்சம் நீண்டு தொய்கிறது
விம்மி மார்புப் பக்கந்தான்!

மேரி : பச்சைப் பொய்போங் கள்அத்தான்!
பகடியில் ஆளோ படுமோசம்!

(மேரி பளிங்கனுக்குப் பக்கத்தில் படுக்கையில் சப்பணங் கொட்டித் தாராளமாக அமர்ந்து கொள்கிறாள்)

மேரி : மடியே! மடியே! நீயென்ன
மாறாப் பாவம் செய்தாயோ?
இடுவார் இல்லை ஏற்றுக்கொள்
என்றே எந்தப் பிச்சையையும்

பளிங் : உடலே உடலே நீயென்ன!
உயர்ந்த தவம்தான் செய்தாயோ?
படுக்கச் சொல்லிப் பரியாமல்
பரியும் அன்பைப் பாராயோ?

(பளிங்கன் மேரியின் மடியில் தலைவைத்துப் படுக்கிறான்)

பளிங் : மடுவில் மலராய்த் தண்ணிலவாய்
வதனம் ஏந்தும் மேரீ!நின்
மடியின் உயரம், அகலங்கள்
வழக்கும் மென்மை தாமென்னே!

மேரி : அடடா! அவரின் பாராட்டின்
ஆழத் தைப்பார் கவிதைபோல்!
கொடும்பா ரம்உங் கள்மூளை
கொல்கிற தென்னை மடியோடு!

(பளிங்கன் சிரிக்க அவளும் சிரிக்கிறாள்)

தமிழைப் படிக்க வேண்டுமெனத்
தவியாய்த் தவித்தேன்! வீட்டாரோ
சுமையாய்ச் சுமத்தி விட்டார்கள்
தொல்லை மருத்துவக் கல்வியினை!

பளிங் : சுமையாய்க் கருதேல்! ஒப்பற்ற
தொண்டாய்க் கருதில் இனிதாகும்!

மேரி : அமைந்த தத்தான் தமிழ்ப்பித்தோ
அடியாள் நெஞ்சில் பிறப்பினிலே!

மருத்து வத்தைத் தொண்டென்று
மதிக்கும் நெஞ்சம் உண்டாயின்
கருத்துக் கினிய துண்மைதான்!
கற்றல் கடினம்! அதைவிட்டு
வருத்து கின்ற வறுமையிலும்
வண்ணத் தமிழின் சுவையோடு
சிரித்து வாழ்வேன் காலமெல்லாம்
தெய்வம் உங்கள் நிழலிலே!

நிலவில் இருந்து தேன்பாட்டு
நீங்கள் களித்துப் பாடிடவும்,
செலவில் லாமல் தமிழ்துய்த்துச்
சிறியேன் அதனை எழுதிடவும்,
உலகில் தமிழின் தொன்மையினை
உணர உணர்த்த உழைக்கையிலே
பலதொண் டருகில் செய்திடவும்
பாரில் தவமே வேண்டாமோ?

பளிங் : படிப்பை முடித்து மருத்துவராம்
பட்டத் தோடு நீவரவும்
எடுத்து நமது மணப் பேச்சை
இன்பக் கடலில் நீந்திடலாம்!

மேரி : படிப்ப தெல்லாம் இனியுங்கள்
பசுமை நிழலில் குந்தித்தான்!
துடுப்புக் கையில் ஏந்திட்டோம்!
தோணி யோட்டத் தடையேனோ?

என்ன நீண்ட சிந்தனையோ?
ஏதும் பட்டம் அற்றவளாம்
சின்னப் பெண்ணைப் பார்போற்றும்
சிறந்த கவிஞன் மணந்திட்டால்

தன்னை உலகம் இகழுமெனுந்
தயக்கம் போலும்! என்செய்வேன்?

பளிங் : பொன்னே! மணியே பூமலையே!
புரியா தென்னைக் கொல்லாதே!

மேரி : மற்றும் பெண்கள் போல்அணிகள்
வாங்க ஆசைப் படமாட்டேன்!
சுற்றித் திரிந்தும் அங்கிங்கு
தொலைக்க வேண்டேன் நேரத்தை!
பற்றா துணவு வந்தாலும்
பசியைக் கூடத் தாங்கிடுவேன்!
பெற்றார் தடுத்தா லுங்கேளேன்!
பின்னால் வருவேன் நரகிற்கும்!

(மேரியின் கண்களில் ஊறி வழிந்த சூடான கண்ணீர்த் துளிகள் பளிங்கனின் நெற்றியில் விழ அவன் திடுக்கிட்டு எழுந்து மேரியை அணைத்துக் கொள்கிறான்)

பளிங் : ஐயோ அன்பே! அழுகை ஏன்?
அல்லல் படநான் விடுவேனா?
மெய்யாய்ச் சொல்வேன் வானில்தான்
வெள்ளி பூக்க மறந்திடலாம்!
வெய்யோன் வரவும் தவறிடலாம்!
மேகம் உலவ மறந்திடலாம்!
கையில் அடித்தேன் என்னுயிரே!
கலங்க உன்னை விடமாட்டேன்!

பளிங் : ஆனால்! ......
மேரி : என்ன ஆனாலோ?
பளிங் : அநியா யத்தால் உன்கல்வி
போனால் உலகம் என்னைத்தான்
புல்லன் என்னும்! இல்லையா?

மேரி : நானோர் வாறாய்க் கற்றுங்கள்
நல்ல பெயரைப் பேணிடுவேன்!
வானார் சுவைவாழ் வெனக்குவரல்
மனந்தாங் காரே இகழ்ந்திடுவார்!

பளிங் : அப்படி யானால் சரியுன்றன்
அப்பா விடத்தில் ஆள்விட்டே
ஒப்புதல் பெற்று மணத்திற்கும்
ஒழுங்கை விரைவில் செய்கின்றேன்!
மேரி : இப்பொழு தேஓர் அச்சாரம்
ஏற்றுக் கொள்க!
பளிங் : ஆகா!தேன்
கப்பம் பெறவோர் வழிகண்டேன்!
மேரி : கப்பம் அல்ல "வேறு" விழும்!
(மேரி குறும்பாகச் சிரிக்கிறாள், பளிங்கனும் சிரிக்கிறான்)

அதுசரி அப்பா விடம்ஆனை
அனுப்பிக் கேட்டல் என்றைக்கோ?
பளிங் : எதுஉன் ஊரென் றறியாமல்
எப்படி ஆளை அனுப்புவது?
மேரி : இதுதெரி யாதா? மயிலிட்டி!
பளிங் : எங்கள் ஊரும் கொடிகாமம்!
மேரி : இதற்குள் மீனவர் குலமெங்கள்
குலம்என் பதையறிந் திருப்பீர்கள்!

பளிங் : மீனவர் பெண்ணென் றாலென்ன,
விண்ணார் மலையில் குறவரெனும்
தேனவர் பெண்ணென் றாலென்ன,
திரிந்து மந்தை மேய்த்துவரும்
கானவர் பெண்ணென் றாலென்ன,
காலே நிலத்தில் படியாத

வானவர் பெண்ணென் றாலென்ன,
மாறா வளையா நேர்மையரேல்!

எங்கள் குடும்பம் வேளாண்மை
என்னும் தொழிலில் ஓங்கியது!

மேரி : உங்கள் நண்பர் பழிப்பாரோ?
உறவு முறையோர் தடுப்பாரோ?
சிங்கக் கவிஞ! சிறுத்தையினைத்
திருமணஞ் செய்வா யோ? என்று
பொங்கும் உங்கள் விசிறிகளும்
போக்கை மாற்ற நிற்பாரோ?

பளிங் : கற்பனை மிகவும் உச்சமடி!
கனவுங் கலந்து காண்கின்றாய்!
அற்பனும் அல்லன் யான்!சொந்த
அறிவின் முடிவை நம்பிடுவோன்!
தெற்கினில் தமிழர் திருநாட்டில்
சிறியர் புகுத்தி வைத்துள்ள
சிற்சில சாதிப் பிளவின்று
சிதறி வருதல் பாரன்பே!

மேரி : அப்படி யானால்.......?

பளிங் : எத்தடையும்
அசைக்கா தென்றன் உறுதியினை!
கொப்பினில் துவளுங் கொடியேபோல்
கூடி வாழ்தல் நிச்சயமே!
கப்பிய நாணச் செம்மையிலும்
கன்னந் தம்மின் எழிலைப்பார்!
இப்படி ஏங்கிப் பார்த்தென்றன்
ஏழை உயிரை வாங்காதே!

(பளிங்கன் அன்போடு தலையைத் தடவ மேரி முறுவ லுடன் தலை குனிகிறாள். மேரி தனது மெத்தையைத்

தட்டி விரிக்கிறாள். மடித்த கம்பளிப் போர்வையை இருகைகளாலும் பளிங்கன் மடியில் வைக்கிறாள். லில்லியை அழைத்து அவளது கட்டிலைத் தானும் சேர்ந்து அடுத்த அறைக்குத் தூக்கிச் சென்று கதவைச் சார்த்துகின்றாள்.)

**"திரை"**

---

## காட்சி : 5

இடம் : மயிலிட்டிக் கடற்கரையை ஒட்டி அமைந்த மாடிவீடு

நேரம் : நண்பகல் 12 மணி

உறுப்பினர்கள் : குரிசுச் செல்வி, கணவன் சூசைப் பிள்ளை.

(நீலம் பரந்து வெள்ளலை மலியும் கடற்கரையினிலே தென்னந் தோப்பினை ஒட்டித் தெருவோரமாக அமைந்துள்ள மாடி வீட்டின் முன் கூடம்! சுவரில் ஏசுநாதரின் கடைசி இராப் போசனக் காட்சி ஓவியம், ஏசுவின் மாட்டுத்தொழுவ அவதாரம் போன்ற அழகான படங்கள் மாட்டப்பட்டுள்ளன. புதுப் புதுத் தையல் நுணுக்கங்களின் மயமாக அமைந்துள்ள உறைகளைத் தாங்கிச் சுவரோரமாக அடுக்கிக் கிடக்கும் நாற்காலிகள், ஓவியக் கடைசல் அமைந்த பச்சை நிறக் கண்ணாடிகள் இடம்பெற்றிருக்கும் சன்னல்கள், என்பவற்றுடன் கடலலைகள் அனுப்பும் குளிர்ச்சிக் காற்றின் நடுவில், கடலிரைச்சலின் மத்தியிலும், அவ்வீடு அமைதியில் உறங்கிக் கிடக்கிறது.

எய்துவிட்ட அம்பு போலச் சினத்தில் கற்றை மீசை துடிக்க, தோளிற் சால்வை சரிந்து விழ, நாகத்தின் சீற்றம் மூச்சில் புலப்பட, தமது வேட்டியையும் அக்கறையின்றித் தூக்கிப்பிடித்துக் கொண்டு ஓடி வருகிறார், சூசைப்பிள்ளை. படியிலேறிக் கொண்டே மனைவியைக் கூக்குரலிட்டழைக்கிறார்.)

சூசை : அடியே குரிசு எங்கேடி?
அடுப்படிக் குள்ளா? வாவெளியே!

குரிசு : (வெளியில் வந்து கொண்டே)
அட்டா! அட்டா! ஆர்ப்பாட்டம்
அதிகம் அதிகம்! அநியாயம்!

சூசை : கொடியாள்! கொடியாள் நீபெற்ற
குமரி கூத்துக் கேட்டாயோ?

குரிசு : கொடியாள் கொடியாள் நான்கட்டிக்
கொண்ட கணவர் கூறுங்கள்!

சூசை : (சட்டைப் பைக்குள் கைவிட்டுக் கொண்டு)
கேட்டால் நெஞ்சு வெடிக்காதோ?
கேவலம்! அடியே! பார்எழுதிப்
போட்டான் யாரோ கடுதாசி!
பொருளைப் பணத்தைச் செலவிட்டுக்
கேட்டைத் தேடிக் கொண்டேனே!
கேளிக் கைக்கும் கூத்துக்கும்
பாட்டுப் பாடும் ஒருகாலிப்
பயலோ டுறவு கொண்டாளாம்.

குரிசு : (சூசையின் சினத்தைத் தணிக்க எண்ணி)
திமிங்கி லத்தின் வயிற்றினிலே
திரளி மீனா கருக்கொள்ளும்?
கமங்க லக்குங் களிற்றுக்குக்
கன்றாய்ப் பூனை யாதோன்றும்?

குமைந்தே ஊரார் வயிறெரியக்
கூடிப் பாடித் திரிந்தோர்க்கே
அமைந்த மகளும் துணையோடே
ஆடிப் பாடல் தவறாமோ?

(சூசைப்பிள்ளை தமது இன்பகரமான இளமை ஞாபகங்களில் மெல்ல மெல்ல மூழ்கடிக்கப்படுகிறார்)

வடியும் வெள்ள வாய்க்காலின்
மதகில் மாலைப் பொழுதெல்லாம்
பொடியன் பொட்டைப் பருவத்தில்
புரிந்த கூத்து மறந்ததுவோ?
கடலின் கரையில் பெரும்பாறைக்
கல்லின் மறைவில் என்னோடு
விடிய விடிய உட்கார்ந்து
விளையா டியதும் தெரியாதோ?

படகில் ஏற்றி என்னைத்தன்
பக்கத் திருத்தி வெகுதூரம்
கடலில் அந்தி இனிமையிலே
காதல் பாடிப் போய்வந்து
வடியும் பாலின் வெண்ணிலவில்
மணலில் கையுள் கைவைத்து
நடையில் வீடு சேர்கின்ற
நாடக மெல்லாம் மறந்தாரோ?

குறைபட் டறையும் கணவன்தன்
கொடுமை தாங்கிக் குந்தியுள
நெறிவிட் டகலாக் கற்புடையாள்
நிலையிற் கடலின் கரையுள்ள
பறவை குந்தும் பாறையிலே
பாங்கா யமர்ந்தே இருபேரும்
சுறவின் இனிய வறைதன்னைச்
சுவைத்துத் தின்ற தறியாரோ?

இலங்கிச் சுடரும் ஒளியாலே
இரவிற் கடலில் நீர்வெள்ளம்
துலங்கித் துள்ளும் ஒளிவீசித்
தோணி கட்குத் துறைகாட்டும்
கலங்கரை விளக்கின் உச்சிக்குக்
கைதொட் டென்னை இழுத்தேறிக்
குலுங்கிச் சிரிக்க விளையாட்டுக்
கோடி புரிந்தார்! மறந்தாரோ!

அரிசிக் கப்பல் வந்ததென
அறிந்தே ஏறிப் பார்த்துவரக்
குரிசு நீயும் வாவென்று
கூட்டிச் சென்று கப்பலிலே
ஒருவரு மற்ற இடந்தன்னில்
உறிஞ்சி என்றன் கன்னம்நான்
பரிசு வழங்கத் தோள்மீது
பரவச முற்ற ஆள்யாரோ?

சின்னஞ் சிறிய கிணற்றினிலே
சிரட்டை கொண்டு நீரள்ளி
என்னை இருத்தி நீராட்டி
இளமைக் கூத்துச் செய்தவரே
தன்னைப் போலத் தம்மகளும்
தகுந்த துணையைத் தெரிந்திட்டால்
பென்னம் பெரிய குற்றமெனப்
பேசி ஏசிச் சீறுவதா?

சூசை : ஐம்ப தாண்டில் முந்தியது!
அந்தக் கதையேன் இப்பொழுது?
வம்பு பேச ஊருக்கெம்
மகளோர் வாய்ப்பைத் தந்தாளே!

நம்பி யிருந்தேன் டாக்டரென
நாடு போற்றும் இவளையென!
தம்பி தமையன் மார்வேறு
தலையில் மோதி அழுவார்கள்!

எத்தனை பேர்க்குப் புளுகிட்டேன்
இவளும் நாளை டாக்டரென!
எத்தனை கனவு கண்டிட்டேன்
இவளின் எதிர்கா லம்பற்றி!
அத்தனை யும்இவள் பொய்ப்பித்தாள்!
அப்பன் ஒப்புதல் இல்லாமல்
பித்தன் பின்னால் போய்விடவா
பெற்றேன் இவளை? சண்டாளி!

இனியும் இவளை இவ்வூரில்
இருக்க விடுதல் அவமானம்!
கெனியா விற்குத் தமையனிடம்
கேட்கா திழுத்துச் செலவேண்டும்!

குரிசு : எனது மகளாய் இவளிருந்தால்
ஈன்றோர் அழிக்க என்காதல்
முனைந்த அன்றே உங்களுடன்
முந்தி நானே வந்ததுபோல்

அந்தப் பையன் பின்னாலே
அடுத்த கணமே ஓடிடுவாள்!

சூசை : இந்தத் தகப்பன் உயிரோடே
இருக்கும் வரைக்கும் நடவாது!

குரிசு : எந்தப் பருவ உணர்ச்சிகளும்
இதுநாள் வரையில் ஏற்காமல்
வந்த நெஞ்சம் ஓராளை
வரித்து நிற்றல் பாருங்கள்!

பெற்று வளர்த்துக் காத்தவரே
பிள்ளை கலங்கப் பிரித்வனை
மற்றும் ஒருவன் பெண்ணாக்கில்
மானங் கற்பை அழிக்கின்ற
குற்றஞ் செய்தோர் ஆகிடுவோம்!
கொடுமை! வாழும் பயிரன்றோ?
கற்ற உலகங் கொண்டாடும்
கவிஞன் தேடக் கிடைப்பானோ?

சூசை : பாட்டுப் பாடு வோர்க்கென்றும்
பட்டினி தானே மிச்சமடி!
மாட்டிக் கொண்டாள் வறுமையிலே!
மாண்டு போக விடலாமோ?
பாட்டைக் கேட்டா ஊ!!என்போர்
பத்துச் சதமுந் தரமாட்டார்!
குரிசு : ஓட்டுக் கைய னோபிறரின்
உதவி நாட இப்பையன்?

உங்கள் இந்த மருமகனோ
உழைத்து வாழும் ஆசிரியன்!
சூசை : தங்கள் கஞ்சி, சேலைக்குத்
தாரா எம்அவ் வருவாயே!
பங்கம் வீட்டுப் பெயருக்கும்!
பரிவே காட்டேன் ஒருபொழுதும்!
குரிசு : எங்கள் குலத்தை விடமிகவும்
ஏற்றம் என்பர் அவன்குலமே!

சூசை : அரச குடும்ப மாகத்தான்
அவனின் குடும்பம் இருக்கட்டும்!
பெரிது நமக்கு நங்குலமே!
குரிசு : பெரிய துங்கள் குலமென்றால்

பெரிய மகனேன் மேல்நாட்டுப்
பெண்ணை மணக்க விட்டீர்கள்?
முரட்டுத் தன்மைக் குறைவால்தான்
மொழிவேன் பெண்கள் அழிகின்றார்.

(குரிசு கண்களில் ஊற்றெடுத்து வழியும் கண்ணீரைத் தன் முன்றானையால் துடைத்துக் கொள்கிறாள்)

சூசை : என்ன சொல்லி அழுதாலும்
இரங்க மாட்டேன்! நாள்பத்தில்
என்ன எவைகள் தேவையென
எண்ணி ஒழுங்கு செய்துதலை
மன்னார்த் துறையில் கப்பலிலே
மகளை எனக்கு முதலேற்றிப்
பின்னால் ஏறிப் போய்வந்தே
பேச்சுன் னோடு! போ உள்ளே!

**"திரை"**

---

## காட்சி : 6

இடம் : கடல் (கரையிலிருந்து $^1/_2$ மைல் உள்ளே)
நேரம் : இரவு 7 மணி
உறுப்பினர் : வள்ளக்காரக் கிழவன், மேரி.

(நிலா வெளிச்சத்தில் நீலக்கடல் பொன்னொளி துளும்பத் துள்ளுகிறது. வெண்ணிலவின் தங்கத் தட்டுப் போன்ற பிம்பம் அலை முகடுகளில் நீந்திச் சரிகிறது. வள்ளம் ஒன்று கடலில் மேற்கு நோக்கி மெல்ல மிதந்து வருகிறது. கிழவன் ஒருவன் கறுத்து முறுக்கேறிப் பளபளக்கும் மேனியுடன் துடுப்பு வலிக்கிறான். திடீரென்று கடலில் எங்கிருந்தோ ஒரு பெண்ணின் அவலக் குரல் கேட்கிறது)

பெண்குரல் : ஐயோ! ஐயோ!
கிழவர் : குரலேதோ
அலையின் நடுவே எழுகிறதே!
பெண்குரல் : ஐயோ!
கிழவர் : யாரோ தவிக்கின்றார்!
அரிய மனித உயிரன்றோ?
மெய்தான் அங்கே பாரோர்பெண்
மிகவும் சோர்ந்தாள்! வருகின்றேன்!

(வள்ளக் காரக் கிழவர் வள்ளத்தை விரைந்து அவளருகில் செலுத்தி)

கையை நீட்டு மகளே!நீ
கவனம் இப்படி இருமெல்ல!

(வள்ளத்தில் இழுத்தமர்த்தப்பட்ட பெண்ணின் முகத்தில் நீண்ட நேரம் அலைகளுடன் போராடிய களைப்புத் தெரிகிறது. கண்கள் கண்ணீரை வெள்ளமாகப் பொழிகின்றன. அவள் வேறு யாருமல்லள் மேரிதான்! கிழவர் சுற்று முற்றும் ஒரு முறை சிந்தனை தேங்கிய முகத்துடன் பார்த்துப் பெருமூச்சு விடுகிறார்)

கிழவன் : யார்நீ மகளே! எப்படி இவ்
வல்லல் உனக்கு வந்ததுவோ?
பார்வைக் கிங்கே கப்பல்களோ
படகோ ஒன்றும் தெரியவில்லை!
மேரி : ஊர்எ னக்கு மயிலிட்டி!
((முனகி) ஊ! ஆ! அப்ப! சொல்கின்றேன்!
கிழவர் : நீர்அங் கிருந்திங் கேன்வந்தீர்?
மேரி : நிலைமை செய்த பொல்லாங்கு!

கிழவர் : பிள்ளை! நல்லாய்க் களைத்திட்டாய்!
பெட்டிக் குள்ளே பாலுண்டு!
மெள்ள எடுத்துக் குடிகொஞ்சம்!

வெட்கம் வேண்டாம் குடி! இந்தத்
தள்ளா வயதுக் கிழவன்உன்
தந்தை தந்தைக்கும் மூத்தோன்!

(மேரி பெட்டியைத் திறந்து சுடுநீர்ப் போத்தலை எடுத்துத் திறந்து பால் வார்த்துக் குடிக்கிறாள்)

அள்ளி நான்கு பிடிபட்டும்
ஆறித் தின் நீ!

மேரி : இதுபோதும்!
கிழவர் : வள்ளந் தன்னில் வலைவீச
வந்தேன்! வந்த வழியிலொரு
பிள்ளை உயிரைக் காப்பாற்றும்
பெரும் பேற் றைத்தந்தான் முருகன்!
துள்ளித் துள்ளி அலைவேறு
தூக்கி வள்ளம் வீசிடு'தே!
மேரி : உள்ள மட்டும் உயிருங்கள்
உதவி மறவேன் பெரியவரே!
கிழவர் : என்ன உதவி செய்திட்டேன்?
எவரும் செய்யும் செயல்தானே!
மேரி : இன்னும் பத்து மணித்துளியில்
இறந்தி ருப்பேன்! காத்தீர்கள்!
கிழவர் : என்ன நடந்த தினிச்சொல்லு!
எப்படி இங்கே வந்தாய்நீ?
மேரி : மன்னார்க் கரையை விட்டின்று
வடக்கு நோக்கிச் செல்கின்ற

கப்பல் தன்னில் தான்வந்தேன்!
கடல்கள் பலவுந் தாண்டிப்போய்
அப்பா வுடனே கெனியாபோய்
அடைக்கப் படுவேன்! தலைமுறையின்

ஒப்பில் கவிஞன் என்தலைவன்
உறவைப் பிரிந்த பின்வாழ்வா?
தப்பி மீள்கில் மணந்திடுவேன்!
சாவே னாகில் கவலையில்லை.

என்று துணிந்து மறைவாக
எட்டிக் குதித்தேன் கடலுள்ளே!
நன்றாய் நீந்தத் தெரிந்ததனால்
நான்கு மைலை நீந்திட்டேன்!
என்றன் கர்த்தர் அருளாலும்
இனிய தலைவன் அன்பாலும்
குன்றிக் களைத்த போதில்கை
கொடுக்க வந்தீர் பெரியவரே!

கிழவர் : (துடுப்பை ஓயாது வலித்துக் கொண்டே)
கவிஞன் என்றாய் மகளேஅக்
கவிஞன் யாரோ? அண்மையிலே
கவிதை ஒன்றை ஏடொன்றில்
கண்டேன்! அருமைப் பாட்டம்மா!
தவழும் அலையின் தண்ணீரில்
சாமந் தன்னில் வலைவீசும்
அவலத் தொழிலா ளர்வாழ்வை
அழகாய்ச் சொல்லும் அப்பாட்டு!

மேரி : அதனை யாத்த கவிஞன் யார்?
கிழவர் : அவன் பெயர் ஏதோ புதிதம்மா!
எதுவோ பளிங்கோ பளிங்கனோ
என்றே ஞாபகம்! வீரன்தான்!
மேரி : (மனங்குளிர்ந்து)
அதுதான்! பளிங்கன் என்கணவர்
அருமைப் பெயரே!

கிழவர் : அப்பப்பா!
குதியைப் பாரேன் அவர்பெயரைக்
கூற! அருமை அன்பம்மா!

"நாடுவிட்டு நாடுசெல்லுவோரில் பலர்
நாசஅலை யால் மடிவர் நீரில்!
கோடி வெலும் மாந்தரிடம்
கொண்ட வுயிர் தாம்பெருகி
ஓடுமெழில் மீன்குலங்க ளாவ - கடல்
ஊன்றுதுடுப் பேருழவர் மேவ!

ஊன்றுதுடுப் பேருழவர் மேவ - அலை
உந்தியெறிந் தேபலருஞ் சாவ
மீன்கள் பல விற்குகந்த
வித்து களாய் அவ்வுயிர்கள்
ஈன்றிடுவ எண்ணரிய மீனே - துடுப்
பேருழவர் வாழ்க்கையிது தானே!"

இந்தப் பாட்டிற் கழகாக
இட்ட பெயர்மீ னின்வித்து

மேரி : (மனதுள்)
சிந்தை எல்லாம் ஆனந்தத்
தேஹற் றுத்தான் திறந்ததுவோ?
நொந்தேன் அலையின் வீச்சாலே
நோபோ யிற்றிப் பேச்சாலே!
(கிழவர் கேட்கும் வண்ணம்)
வந்து கரைக்குச் சேர்ந்தவுடன்
வாட கைக்குப் பிடித்துடனோர்
உந்து என்னைக் கூட்டிப்போய்
ஊரில் விடவேண் டும்அன்பாய்!
பிந்தில் மீண்டும் தீங்கே!

கிழவர் : ஏன்
பிள்ளை?

மேரி : கப்பல் தனில்நின்று
தந்தி கொடுக்கத் தலைமன்னார்
தன்னில் காவல் துறையோர்கள்
முந்திக் கொண்டே அப்பியெனை
முறிய டிப்பார் என்திட்டம்!

தங்கச் சங்கிலி காப்புண்டு!
தந்திடு கின்றேன் செலவுக்கு!
கங்குல் விடியா முன்நாங்கள்
கடுகிச் சென்று யாழ்ப்பாணம்
அங்கே கொடிகா மஞ்சேர்ந்தால்
அவருட னேகச் சேரிபோய்
பங்க மின்றி மணப்பதிவை
பாது காப்பாய் முடித்திடலாம்!

பின்னர் எனக்குத் துயரேது?
பெருமான் எதற்கும் அருளட்டும்!
தென்னன் தமிழில் தோய்ந்தாடித்
தேறா தழகுத் தேனுண்ணும்
மன்னன் அடியைக் கைவருட
மன்னார் சென்ற கதைதொட்டு
என்னைக் காத்த பெரியவரின்
இனிய பண்புஞ் சொல்லிடுவேன்!

தாத்தா

கிழவர் : என்ன மகளே?

மேரி : என்
தவிப்பை மாற்ற வேண்டுகிறேன்!

கிழவர் : ஆத்தாய்! குழந்தாய்! அதற்கென்ன?
அதுநான் செய்வேன்!
உலகைஎலாம்

மேரி : காத்து நிற்கும் இறைதங்கள்

கருணை வாழ்வைக் காக்கட்டும்!

கிழவர் : பார்த்தா யாகரை தெரிகிறது?

மேரி : படகைக் கட்டிச் சென்றிடுவோம்!

"திரை"

---

## காட்சி : 7

இடம் : பளிங்கன் வீட்டு முன்கூடம்

நேரம் : இரவு 4 மணி

உறுப்பினர் : பளிங்கன், வள்ளக்காரக் கிழவர், மேரி.

(பளிங்கன் சாய்வு நாற்காலியில் நொந்து சோர்ந்த உள்ளத்துடன் முடங்கிக் கொண்டு, மேரியிடமிருந்து வந்த கடிதத்தைக் கண்கள் மேயவிட்டுக் கிடக்கிறான்)

பளிங் : (கடிதத்தை வாசிக்கிறான்)
இனிய தினிய துலகென்றே
எண்ணி யிருந்தேன்! அறியாமை!
முனிகள்! முனிகள்! உலகெல்லாம்
முனிகள் மயமே! யாரோ ஓர்
முனியென் தந்தை முனிக்கேநான்
முறைகெட் டேனென் றெழுதியதாம்!
சனியன் பிடித்த தெனக்கன்றே!
தந்தை வந்தார் பறந்தோடி!

போட்டார் இழுத் தெனை உந்துக்குள்!
புகையாய்ப் பறந்தே ஊர்சேர்ந்து
பூட்டி வைத்தார் அறைக்குள்ளே!
புலம்பி அழுது மன்றாடிக்
கேட்டேன் வாழ விடும்வண்ணம்!
கேவல மாக ஏசிட்டார்!
பாட்டம் பாட்ட மாயழுதேன்!
பரிந்தென் தாயும் அழுதிட்டாள்!

அப்பா என்ன செய்வாரோ?
அம்மா காப்பாய் என்றழுதேன்!
எப்படி உனைநான் காப்பேன்'டி?
எனையோ கொல்ல வருகின்றார்!
தப்பா துன்னை அண்ணனிடம்
தானே கூட்டிச் செல்வாராம்!
இப்படிச் சொன்னாள் அம்மாவோ
ஏங்கிப் பதறித் துடித்திட்டேன்!

அண்ணன் கெனியா வில்டாக்டர்!
ஆங்கிலப் பெண்ணை மணஞ்செய்தார்!
எண்ணம் இவர்க்கும் தந்தைக்கும்
என்னை டாக்டர் ஆக்குவதே!
மண்ணைப் போட்டேன் கனவிலென
மாறாக் கோபங் கொண்டப்பா
மண்ணை எனது வாழ்க்கையிலும்
வாரி வீசத் துணிந்திட்டார்!

என்னுள் ஏதோ நின்றடியே
எதற்கும் அஞ்சேல் என்கிறது!
“கன்னல் கவிதை மன்னன்தன்
கவிதை ஊற்றாய் என்றென்றும்
உன்னை வைத்து வாழ்விப்பேன்!
ஒழிக அச்சம்! என்கிறது! ஆம்!
இன்னல் யார்க்கும் எண்ணாதேன்!
இன்னல் எனக்கும் வாராதே!

செத்தும் உங்கள் மனைவியெனும்
சிறப்புக் காப்பேன்! செல்வவெறிப்
பித்தர் அப்பா திட்டத்தைப்
பிழைக்கச் செய்து வந்திடுவேன்!

முத்தை ஈன்ற சிப்பியதே
முனைந்து நெருப்பில் தள்ளிடு'தே!
அத்தான்! என்றன் வழிநோக்கி
ஆறி வீட்டில் இருந்திடுக!

முத்தைப் பூண்டு மதித்தவரே!
முகிலை ஏற்ற மலைமுடியே!
பத்துச் சதங்கை யில்நின்றால்
பண்பை மனிதன் இழந்திடுவான்!
எத்தனை கள்ள வழிகளிலே
ஈட்டிக் கொண்டார் பொருள்தந்தை!
அத்தனை பொருளும் சந்ததியை
அழித்தே தானும் தேய்ந்திடலாம்!

ஏனோ உலகில் மனிதர்க்குள்
இத்தனை கொடிய நிலைமைகள்?
ஆனால் என்ன ஆண்டவரின்
அருளை வெல்ல முடியாது!
தேனாய்க் கவிதை செய்பவரே!
திருமணப் பதிவு செய்திட்டால்
தானாய் அப்பா கூத்துக்கள்
தாளம் இன்றி வீழ்ந்துவிடும்!

தப்பி ஓடி வரவென்றால்
தம்பி மார்கள் பெருங்காவல்!
அப்பா வுக்குத் தோற்காத
அரக்கத் தம்பி மார்கள்தான்!
இப்பொழு தப்பா கடல்தாண்டும்
ஏற்பா டோடிச் செய்கின்றார்!
கப்பல் தன்னில் என்றாலும்
கண்ணில் மண்ணைத் தூவிட்டு,

கடலில் குதித்துப் பயமின்றிக்
கரைக்கு நீந்தி வந்துங்கள்
மடியில் விழுவேன்! இளமையிலே
மயிலிட் டிக்கரை ஓரத்தால்
நெடுந்தூரம்அப் பாவுடனே
நீந்திச் சென்ற துணிவுண்டு!
மடிகில் மடிவேன்!மடியேனேல்
மடியில் மகிழ்வேன் தங்களுடன்!

(கதவு திறக்கும் ஒலி கேட்டுப் பளிங்கன் அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கிறான்)

பளிங் : யாரிங்கு கதவைத் திறக்கின்றார்?
அடடா! யாரோ பெண்! இந்த
நேரம் எனிலோ நள்ளிரவு!
நிலையும் மேரி போலத்தான்!
ஈரம் சட்டை! அவளேதான்!
எழுத்தை மெய்க்கச் செய்தாளே!

மேரி : (திரும்பிப் பார்த்து)
வாருங் கள்,உள் பெரியவரே

பளிங் : (மனதுள்) வருகின் றார்ஓர் முதியவரும்!
(பளிங்கன் எழுந்து நின்று)

யாரென் மேரி? வாகண்ணே!
அன்பே கனவா இதுவெல்லாம்?
வீரப் பெண்ணே! தமிழ்ப்பெண்கள்
வீரத் திற்கோர் எல்லை நீ?
யாரப் பெரியவர்

மேரி : வள்ளத்தில்
அலையின் நடுவில் காத்தென்னை
ஈர நெஞ்சின் உந்தலினால்
இங்கு வரையும் துணைவந்தார்!

பளிங் : (தன்னுள்)

பழிகா ரன்என் மேல்வைத்த
பாசத்தால் இடர் சுமந்தாளே!
பிழிபட் டாள்கடல் அலைகளினால்!
பீதியில் வெந்தாள் ஆழ்கடலுள்!
சுழிகள் இழுக்கப் போரிட்டும்
சுறாக்கள் நெருங்கச் சமரிட்டும்
தளர்ந்து நொந்து களைத்தன்றோ
தள்ளா டியிவள் வருகின்றாள்?

(பளிங்கனின் கண்கள் கண்ணீரைச் சொரியக் கண்டு மேரி பதைக்கிறாள்)

மேரி : (மனதுள்)

கொஞ்சும் உணர்வுக் குமிழிகளால்
கோடி கவிதை அன்பர்கள்
நெஞ்சம் உருக்கும் பெருமைக்கு
நிலைக்கள மான பாவலனின்
நெஞ்சம் உருக்கி விட்டதிவள்
நிறைந்த அன்போ! ஐயையோ!

(பளிங்கனின் கண்ணீரைத் தன் விரல்களால் உரிமை யோடு துடைத்து விட்டுக் கொண்டே)

பிஞ்சுக் குழந்தை போல்நீங்கள்
பெரிதும் கவலைப் படலாமோ?

பளிங் : (கிழவரை அன்போடு பார்த்து)

பெரியவர் கதிரையில் அமருங்கள்!
பெரிதும் எனது தொழுகைக்கும்
உரியவர் நீங்கள்! சொல்கில்,பெண்
ஒருத்தியை அல்லக் காத்தீர்கள்!
அரியதொர் பண்புத் தெய்வத்தை,
அறத்தின் தமிழின் செல்வியினைக்
கருதிக் காத்த தொண்டுடையீர்!
கடவுள் போல்வீர்! வணக்கங்கள்!

கிழவர் : இந்தச் சிறிய செயலை எலாம்
இப்படிப் புகழக் கூடாது!
உந்து வெளியில் நிற்கிறது!
உங்கள் மனைவி வாடகையாய்த்
தந்த நகைகள் மறுத்திட்டேன்!
தம்பி நான்போய் வருகின்றேன்!
சொந்தப் பிள்ளை அற்றேன்நான்!
சொல்கில் மக்கள் நீங்கள்தாம்!

பளிங் : ஐயா அமர்க சிலநொடிகள்!
அன்போ டெமக்குச் சமயத்தில்
செய்யா மற்செய் தஉதவி
சிறிதும் மறக்கத் தக்கதுவோ?
மெய்யாய்க் கெஞ்சிக் கோருகின்றேன்!
வேண்டா மென்னா தீரிரண்டு
கையால் தருவேன் சிறிதுபணம்!
கனிந்து வாங்கிச் சென்றிடுக!

கிழவர் : தம்பீ! நீங்கள் தானாஅத்
தங்கம் போல்மீ னின்வித்தாம்
செம்பட வர்கள் பற்றியதோர்
சிறந்த பாடல் பாடியவர்?
பளிங் : "தும்பி" ஏட்டில் வந்ததையா
சொல்கின் றீர்கள்?
கிழவர் : ஆமாம்!நான்
அம்பி செலுத்தும் தொழிலாளி!
அருமை தம்பி அப்பாட்டு!

பளிங் : ஏதோ! யாரோ தருவதனை
எழுதித் தாளில் விடுகின்றேன்!
கிழவர் : யாதோ சொன்னீர்? அப்படியேல்
யாரோ அதனை இயற்றிட்டார்?

பளிங் : காதோ கண்ணோ அறியாத
கலையின் அன்னை பாடுகிறாள்!
மீதூர்ந் திடவோர் வெறி நெஞ்சில்
விட்டி டாமல் எழுதுகிறேன்!

(உள்ளே சென்று மீண்ட பளிங்கன் கிழவரின் கையில் பத்து ஐம்பது ரூபா நோட்டுக்களை மரியாதையுடன் வைக்கிறான். மேரியும், பளிங்கனும் கண்கலங்கிக் கிழவரை வணங்குகின்றனர். கிழவர் எழுந்து அவர் களைக் கருணை பொங்கப் பார்க்கிறார்)

கிழவர் : போய்வரு கின்றேன்! பல்வளமும்
பொலிந்து வாழ்க குழந்தைகளே!

மேரி : தாய்பிரி வதுபோல் என்னெஞ்சம்
தங்கள் பிரிவை நினைக்கிறது!

கிழவர் : தாய்தகப் பந்தம் ஆசியையும்
தக்கவழியில் தேடிடுக!

பளிங் : வாய்த்திடும் போது வெகுவிரைவில்
வருவோம் தங்கள் வீடும்!

கிழவர் : ஆம்!

(பெரியவர் கதவை மூடிக் கொண்டு இருளில் மறைகிறார். கதவுவரை வந்து அவரை வழியனுப்பி விட்டுத் திரும்புகின்றனர், பளிங் கனும் மேரியும்)

பளிங் : அம்மா வைத்துச் சென்றுள்ள
அருமை யான சேலைகள்!
சும்மா கட்டு! நாளைக்கே
தோதாய் வாங்கித் தருகின்றேன்!

(உள்ளே சென்று சில வினாடிகளில் மேரியிடம் உடைப் பெட்டியொன்றைத் திறந்தபடி கொண்டு வந்து கொடுக்கிறான். அவள் சேலைகளை ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்க்கிறாள்).

மேரி : சும்மா என்ன சும்மாவோ?
சோக்காய் இருக்குச் சேலைகள்!
பளிங் : அம்மா!
மேரி : என்ன அம்மாவோ?
பளிங் : ஆமாம் இனிஎன் தாயும்நீ!

சேலை கட்டித் தலை வாரிச்
சிறப்பாய்ப் பின்னி அணிசெய்க!
மேரி : மாலை கட்டி வைத்திடுவோம்!
வடிவாய் விடியா முன்னம்போய்
வேலன் முருகன் முன்னிலையில்
வேண்டிமாலை சூட்டிடுவோம்!
பளிங் : காலை தேவா லயஞ்சென்று
கச்சே ரிக்குஞ் சென்றிடுவோம்!

அங்கே யிருந்து காவல்துறை
அகத்திற் கேகி, நீஅந்தப்
பொங்குங் கடலில் பட்ட துயர்
போக இருநாள் இளைப்பாறி
இங்கு தங்கிக் கல்லூரி
ஏகும் ஒழுங்கைச் செய்து பினும்
தங்கித் தரியா மற்கண்டி
சார்வித் துனைநான் மீண்டிடுவேன்!

(ஏமாற்றமும் ஏக்கமும் தொனிக்கும் கண்களால் பளிங்கன் முகத்தை ஏறிட்டு நோக்கக் கண்ணீர் கண்களில் பெருகி மேரி கன்னங்களில் வழிந்தோடுகின்றது. அவளைத் தேற்ற எண்ணி அவளருகில் அமர்ந்து, அவளைத் தன் மடியில் படுக்கவைத்துத் தலையைக் கோதியவாறு)

பளிங் : இரும்பை வெல்லுந் துணிவுடையாய்!
ஏறும்பை வெல்லும் முயல்வுடையாய்!

கரும்பை வெல்லும் பண்புடையாய்!
கடிதில் இடமாற் றம்பெற்றுக்
கரிந்து வேகும் உன்னெஞ்சக்
கவலை மாறக் கண்டியிலே
இருந்து வாழ்வேன் உன்னோடே!
என்பா டினிடாக் டர்அம்மா!

(மேரி மகிழ்ச்சியோடு கண்ணீரைத் துடைத்துச் சிரிக்கிறாள்).

"திரை"

முற்றும்

# அறிமுகம்



'நானறிந்த' இலக்கியப் படைப்பாளி ச.வே.ப என் பதைவிட, நாடறிந்த எனும் சிறப்பு அடைமொழியே, இவரின் பலதுறைப் படைப்பாற்றலுக்கு மிகப் பொருத்தமாகும். தமிழ் கூறும் ஈழத்தின் தனிப் பெருங் கவிஞர்கள் மிகச் சிலருள் இவரும் ஒருவர்.

தமழ்க் கவிதை மரபுப் பெருங் கடலில் ஆழச்சுழியோடித் தரைதொட்டு, முத்துக்குவியல் எடுத்துவரும் வித்தக நுட்பம் இவருக்குக் கைவந்தகலை. கவிஞனாக, கட்டுரையாளனாக, புனைகதை இலக்கியப் படைப்பாளியாக, இலக்கண அறிஞனாக, நாடகவியலாளனாக மட்டுமன்றி, ஓவியக் கலைஞனாகவும் மிளிர்ந்தொளிரும் 'ச.வே.ப' அறுபத்தைந் தையும் தாண்டி அயராமற் பாயும் ஓர் 'ஈழத் தமிழருவி' அதனால்தான் இந்திய வானொலி நிலையம் ஒன்றுகூட ஈழத்தில் தலைசிறந்த கவிஞர்கள் ஒரு சிலரிலே ஒருவராக இவரைப் புகழ்ந்துரைத்துள்ளது. 'தோன்றின் புகழொடு தோன்றுக' இது வள்ளுவப் பெருமுழக்கம். இதற்கு உதாரணமாகத் திகழும் உலகக்கலை இலக்கியப் படைப்பாளிகளிலே ஒருவராகிய ச.வே.ப 'தோன்றின் தமிழொடு தோன்றுக' எனும் புதுமுழக் கத்தையும் செய்துள்ளார் தமது படைப்புக் களூடாக.

துணை நூலகர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை,
03.08.2005

**ஜெ. கி. ஜெயசீலன்**
அ.இ.கம்பன் கழகம்

*Sunshine Graphics - Inuvil.*